Free Circulation Germany- England
மணி: 70 - ஓசை: 290 கார்த்திகை. November. 2020

# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

Successful Publishing 26 years IN EUROPE

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A

Orientalisch Textilien & Schmuck
30 ஆவது ஆண்டு நிறைவு
தொடர் மலிவு விற்பனை



Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

Dr.IN



## அவ்வுலகம் சென்று வந்தேன்! சேவியரின் ஒரு Covid பயணம்

நடுப்பக்கம்



### நாடக அனுபவங்கள்

ஆனந்தராணி பாலேந்திரா





### உனக்குத் தெரியுமா?

பிரபாலினி பிரபாகரன்

### அரசியல் களம்

கொழும்பிலிருந்து ஆர்.பாரதி

அனைவருக்கும் எங்கள் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்



### இணைய வழிக்கல்வியும் இரையாகும் ஆசிரியர்களும்

பொலிகையூர் ரேகா



நடுப்பக்கம்

சேவியர்

கார்த்திகை 27 : மாவீரர்கள் தினம்

தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி




# வதந்திகள் வராமல் இருக்க திறந்த மடல் இது!

## பெரு மன்னர்கள் காலடிபட்ட அரண்மனை! வெற்றிமணி இல்லத்தின் தனிச்சிறப்பு!

**Brinker Höhe 13 Ludenscheid Germany**

எத்தனை சதுர மீற்றர்,எத்தனை அறைகள்,சுவர் செங்கல்லா? வெண்கல்லா? எத்தனை குளியலறை? இப்படி எத்தனை எத்தனை என்று கேட்டாலும், அத்தனையும் இருந்தும் அதற்கும் மேலாக அரணாக, தமிழ் அரண்மனையாக, இந்த வீடு இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் இந்த வீட்டில் காலடி பட்டவர்களது பெருமையே ஆகும்.

ஒவ்வொரு மனிதருக்கும் தாம் வாழ்ந்த வீடு கோவில் போன்றதே. வீட்டைக் கோவிலாக்கியவர்கள் மறக்கமுடியாதவர்கள் அல்லவா? ஒவ்வொரு நற்செயலும் வீட்டிலிருந்தே புறப்படுகின்றது என்பது சான்றோர் வாக்கு. அதற்கு விதிவிலக்கு அல்ல நான் வாழ்ந்த வீடு. 21 வருடங்கள் வந்தவர்கள், வாழ்த்தியவர்கள், தமிழுக்கு விருந்தானவர்கள், கலைக்குக் கலசமானவர்கள் என்று பல வர்ணங்கள் எண்ணங்களை அலங்கரிக்கின்றன.

வெற்றிமணி வெற்றிக்கொடி நாட்டிய வீடு. 290 வெற்றிமணிகளைப் பிரசவித்த பிரசுரித்த வீடு. 25க்கு மேற்பட்ட புத்தகங்களையும் 30க்கு மேற்பட்ட விழாக்களையும் கண்ட வீடு.

இந்த வீட்டுக்கு வந்தவர்கள் இன்று போல் சும்மா சூமில் [zoom] வந்துபோனவர்கள் அல்ல! பெரியோர்களின் திருவடிகள் பதித்த புண்ணியத்தலம்.

தாயிற் சிறந்த ஒரு கோவிலும் இல்லை. ஆம் எனது அன்னையும்; வெற்றிமணி ஸ்தாபகர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் 2000 ஆம் ஆண்டு வெற்றிமணி விழாவிற்கு இலங்கையில் இருந்து வருகைதந்து 6 மாதங்கள் தங்கிச்சென்ற இல்லம். எனது மாமன் மாமி எம்முடன் வசித்த இல்லம்.

இவர்களுடன் கலை இலக்கிய நண்பர்கள் கல்விமான்கள் என பலர் எம்முடன் தங்கி விழாக்களில் கலந்து ஒன்றாகக்கூடி மகிழ்ந்த இன்ப இல்லம்.

யேர்மனி கல்விக்கழகப்பொறுப்பாளர் இரா.நாகலிங்கம் [கனடா], மகாஜனாக் கல்லூரி அதிபர் பொ.கனகசபாபதி, டாக்டர் கதிர்.துரைசிங்கம், சங்கீதபூஷணம் பொன்.சுந்தரலிங்கம் [இலங்கை], பேராசிரியர்.சண்முகதாஸ்,மனோன்மணி சண்முகதாஸ், ஆசிரியை திருமதி வலன்ரினா இளங்கோவன், பொறியியலாளர் சி.தயாபரன், ரூபவாகினி அறிவிப்பாளர் ரேலங்கி செல்வராஜா [இந்தியா], சீர்காழி. சிவ சிதம்பரம் [இங்கிலாந்து], நூலகவியலாளர் என்.செல்வராஜா, ஓவியர்.கே.கே.ராஜா,இராமநாதன் [இந்து சமயப்பேரவை லண்டன்], ஓவியர்.சந்திரவதனி, தென்னிந்திய திரைப்படப்பாடகர்கள் பல்ராம்,மாதங்கி,டாக்டர்.ரோகினிசதீஸ் எனப் பல ஆளுமைகளைக் கண்ட இல்லம். இது மொத்த எண்ணிக்கையில் பத்தில் ஒன்று. மீதி வருங்காலத்தில் படங்களுடன் பகிர்வேன்.

யேர்மனியில் வாழும் பெரும்பாலானா வெற்றிமணி படைப்பாளர்களுடன் கலைவிருந்து படைத்த இல்லம்.

யேர்மனியில் தமிழர் வரலாற்றில் ஒரு பத்திரிகை எந்த இல்லத்திலும் இருந்து தொடர்ச்சியாக 25 வருடங்களுக்கு மேலாக வந்ததில்லை. அது மட்டுமா 30க்கு மேற்பட்ட விழாக்கள். வெற்றிமணி வெள்ளிவிழாவிற்கு [15.09.2019] மட்டுமே அதன் செலவில் 40 வீத வியாபார ஸ்தாபனங்களின் அனுசரனையுடன் நடைபெற்றது. அவர்களுக்கு இத்தருணத்தில் எனது நன்றி உரித்தாகட்டும். மீதி விழாக்கள் புத்தகவெளியீடுகள் அனைத்தும் செய்ய இடம் தந்த இல்லம் இது. நான் தொழில் புரிந்த kostal நிறுவனத்தையும் மறக்கமுடியாது. எனது வருமானத்தில் நான்கில் ஒருபகுதி தமிழ்ப்பணிக்காகச் செலவுசெய்த இல்லம் இது.

தற்போது சென்ற மாதம் 24ஆம் திகதியுடன் வீட்டை விற்றுவிட்டுச் செல்கின்றேன். இனி வருடத்தில் நான்கு மாதம் பிள்ளைகளுடன் இங்கிலாந்திலும் [வெற்றிமணியால் 26 வருடங்கள் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளைப் பிரிந்து யேர்மனியில் இருந்திருக்கிறேன்], நான்குமாதம் இலங்கையிலும், நான்கு மாதம் யேர்மனியிலும் என மூன்று தளங்களில் இருந்து வெற்றிமணி இன்னும் சிறப்பாக வெளிவரும். இதுவே எனது திட்டம். மீதி இயற்கையின் கைகளில். நான் எங்கு நின்றாலும் வெற்றிமணி பத்திரிகை அச்சில் உங்கள் கரம் வந்து சேரும்.

இவ்வளவு காலமும் வெற்றிமணி உங்களுக்கு ஆற்றிய பணிக்கு கைமாறாக நீங்கள் செய்யவேண்டியது இது தான். உங்களுக்குக் கிடைக்கும் பிரதியைப் பிறருக்கும் பகிருதல்,கடைகளில் பத்திரிகை இருந்தால் அவற்றை ஒழுங்காக அடுக்கிவைத்தல், வெற்றிமணியின் வியாபார ஸ்தாபனங்களை ஆதரித்துத் துணைநிற்றல் என்பனவாகும்.

இவற்றை ஏன் திறந்த மடலாக எழுதுகிறேன் என்றால் ஒன்றும் சொல்லாமல் வெற்றிமணி ஆசிரியர் ஓடிவிட்டார். வெற்றிமணி இனிவராது என்று வதந்திகள் வராமல் இருப்பதற்காகவே.

இனிவரும் காலம் என்மீது நீங்கள் கொண்ட அன்பினை உணரும் காலமாக அமையும். உங்கள் அன்பு ஒருபொழுதும் பொய்க்காது பொழியும் என்ற நம்பிக்கையுடன் வெற்றிமணி தொடர்ந்து ஒலிக்கும்.இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி என்றும்

**அன்புடன். மு.க.சு.சிவகுமாரன்**
**பிரதம ஆசிரியர் வெற்றிமணி**
**சிவத்தமிழ்.**
**(வட்சப் இலக்கம் 0163 199 2333)**



## கார்த்திகை 27

தாயகத்தில்
விடுதலைக்காக
உயிர்நீர்த்த மக்களுக்கும்
மாவீரர்களுக்கும்
வெற்றிமணியின்
அஞ்சலி!








அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 290



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவிக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Edito:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333
e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# மீண்டும் இணையும் தமிழ்க் கட்சிகள் பழைய பாதையில்தான் பயணமா?

கொழும்பிலிருந்து
ஆர்.பாரதி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளைப் பல்வேறு முனைகளில் முடுக்கிவிட்டுள்ள நிலையில், அதனை எவ்வாறு எதிர்கொள்வது எனத் தெரியாமல் தமிழ்க் கட்சிகள் தடுமாறத் தொடங்கியுள்ளன. தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கும் கட்சிகளை ஒன்றிணைப்பதன் மூலமாக தன்னுடைய தலைமையையும், பாதுகாத்து கட்சிகளிடையேயான ஒற்றுமையைப் பேண முடியும் என மாவை சேனாதிராஜா காய் நகர்த்துகின்றார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை கூடிய தமிழ்க் கட்சிகள் இது குறித்த பொதுவான அணுகுமுறை ஒன்றை அமைத்துக்கொள்வது தொடர்பில் இணக்கப்பாடு ஒன்றை எட்டியிருக்கின்றன. இந்தக் கூட்டு வெறுமனே அவ்வப்போது எழக்கூடிய பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான ஒரு கூட்டாகத் தொடராமல், அமைப்பு ரீதியான ஒரு கட்டமைப்பை உருவாக்குவது குறித்து இந்தக் கூட்டத்தில் யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அதனைச் சாத்தீயமாக்குவதற்காக ஏழு பேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கின்றது.

திலீபனின் நினைவேந்தலுக்கு விதிக்கப்பட்ட தடைதான், தமிழ்க் கட்சிகளிடையே ஏற்பட்ட இணக்கப்பாட்டுக்கு வழிவகுத்தது. இக்கட்சிகள் இணைந்து திலீபன் நினைவு தினத்தில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை இணைந்து நடத்தியிருந்தன. அதன் பின்னர் வடக்கு கிழக்கில் ஹர்ததால் போராட்டம் ஒன்றையும் நடத்தியிருந்தன. திலீபனை நினைவுகூருவதற்காக உருவாக்கப்பட்ட கூட்டாக மட்டும் இருக்காமல் இந்தக்கூட்டு எதிர்காலத்திலும் தொடர வேண்டிய தேவை உணரப்பட்டிருக்கும் நிலையில்தான், அடுத்த கட்டச் செற்பாடுகள் குறித்து இப்போது ஆராயப்படுகின்றது.

சிங்கள மக்களின் பெருவாரியான ஆதரவுடன் ராஜபக்ஷக்கள் ஆட்சியமைத்திருக்கும் நிலையில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பூதாகரமாகியிருக்கின்றது. வடக்கு கிழக்கில் காணி அபகரிப்பு தீவிரமாக முடுக்கிவிடப்பட்டுள்ளது. குறிப்பாக சிங்கள பௌத்த மயமாக்கலை இலக்காகக் கொண்டதாகவே அரசின் செயற்பாடுகள் உள்ளன. அரச இயந்திரம் முழுவீச்சில் இந்தப் பணியில் இறக்கிவிடப்பட்டிருக்கின்றது. இதனை மட்டக்களப்பில் கூட காணமுடிகின்றது.

மாகாண சபைகள் அதிகாரத்தில்



இல்லாத நிலையில், மாகாண ஆளுநர்கள் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி சிங்களக் குடியேற்றங்களை முன்னெடுக்கின்றார்கள். மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் இதற்கு முதல் பலியாகியிருக்கின்றார். தமிழ் மக்களின் பாரம்பரிய நிலத்தில் சிங்களவர்களைக் கொண்டுவந்து குடியேற்றுவதற்கு தடையாக நின்ற மட்டமாவட்ட அரச அதிபர் கலாமதி பத்மராஜா அதிரடியாகப் பதவி நீக்கப்பட்டிருக்கின்றார். தமது நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்குத் தடையாக வரக் கூடியவர்களைக் களையெடுக்க அரசாங்கம் தயங்கப்போவதில்லை என்பதற்கு இது ஒரு உதாரணம்!

இறந்த உறவுகளை நினைவுகூருவது நீதிமன்ற உத்தரவுகள் மூலம் தடை செய்யப்படுகின்றது. இதன்மூலம் கடந்தகால நினைவுகள் அடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டு செல்லப்படுவதை அரசு தடுக்கப்பார்க்கின்றது. அரசாங்கம் எவ்வாறான எதிர்பார்ப்புடன் இதனைச் செய்கின்றது என்பதையும் புரிந்துகொள்ள முடிகின்றது.

20 ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்து ஒரு சர்வாதிகார ஆட்சியை நிறுவுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் நிலையில், மாகாண சபைகளை மேலும் பலவீனப்படுத்தும் தமது உபாயங்களை நடைமுறைப்படுத்த அரசு முயற்சிக்கின்றது. இதன்மூலம் மத்தியில் ஒரே இடத்தில் அதிகாரங்களைக் குவிப்பதற்கான முயற்சி ஒன்று முன்னெடுக்கப்படுகின்றது.

தற்போதைய அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வு, போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறல், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதி வழங்குதல்என்பவற்றுக்கு இடமிருக்கப்போவதில்லை என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. இவை அனைத்தும் தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்குவதற்கு மேலாக, அவர்களுடைய எதிர்கால இருப்பையே கேள்விக்குள்ளாக்கக்கூடியவை.

இவற்றை எதிர்கொள்வதற்கு பலமான தமிழ்த் தலைமை ஒன்று எம்மிடம் இல்லை என்பது மிகப் பெரிய குறைபாடு. இந்தப் பின்னணியில்தன் 10 தமிழ்க் கட்சிகள் இணைந்திருக்கின்றன. எதிர்காலத் திட்டமிடலுக்காக 7 உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்திருக்கின்றது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் இதே நோக்கத்துக்காக உருவாக்கப்பட்ட பல கூட்டணிகளை நாம் கண்டுள்ளோம். 1970 களின் பிற்பகுதியில் பெரும் நம்பிக்கையுடன் அமைக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி எதனையும் சாதித்ததாக வரலாறு இல்லை. அதேபோல தமிழ்த் தேசியக்

04 ஆம் பக்கம் பார்க்க...






# கிழவி வேடம்

கே.எஸ்.சுதாகர்



அமைதியாக ஓடிக்கொண்டிருக்கும் ஒரு நதி மீது, திடீரென ஒரு பொருள் குறுக்காக எழுந்து நின்றால் எப்படி இருக்கும்? அப்படித் தான் இருந்தது அங்கே.
மணவிழாவின் கண்கொள்ளாக் காட்சியை நேரிலும், சுவர் வழியே தொங்கிக் கொண்டிருக்கும் எல்.சி.டி ஊடாகவும் பார்த்துக் கொண்டிருந்தவர்களின் கண்கள், சிவபூசையில் புகுந்த கரடி மீது குவிந்தன.

‘திடீரெனப் பிரசன்னமான இராசப்புவின் கையில் பளிச்செசென மின்னியது ஹஜ போன்’. ஒவ்வொரு மேசையாக அலைந்து, தன் சுட்டு விரலினால் ஐ போனைத் தட்டி, முதல் நாள் தான் நடித்திருந்த நாடகமொன்றின் காட்சிகளைக் காட்டிக் கொண்டிருந்தார்.

அப்பு முதல் நாள் ஆச்சி வேடமிட்டிருந்தார். அமைதியாக திருமணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு, அந்தக் காட்சி எரிச்சலைத் தந்தது.

‘எப்படி இருக்கு என்ரை கிழவி வேசம். கொஸ்ரியூமிற்கு மாத்திரம் இருநூறு டொலர்கள் செலவாச்சு..’ வாயின் இருபக்கத்து அந்தங்களும் காதுவரை நீண்டிருக்க, ஹஇகும் இகும்’ என்று சிரித்தபடி சொன்னதையே திரும்பச் சொல்லியபடி இருந்தார். ஏழெட்டுப்பெண்களின் மத்தியில், ஒரு ஆசனம் வெறுமையாக இருக்க அதற்குள் புகுந்துகொண்டார் அவர். தனது ‘ஹஜ போனை’ நீட்டி, சுற்றிச் சுழலவிடச் சென்னபோது அங்கே சலசலப்பு ஏற்பட்டது.

இதையெல்லாம் தூரத்தே இருந்து அவதானித்துக் கொண்டிருந்த ஒரு முதிய பெண்மணி கடுப்பானார். இராசப்பு திருமணத்தைக் குழப்பிவிடுவார் என்று எண்ணினார். அப்புவுக்கு ஆப்பு வைக்க திடீரென கூட்டத்துனுள்ளே புகுந்தார் அந்தப் பெண்மணி. இராசப்புவைக் குற இழுவையாக இழுத்துச் சென்று விசாரணை செய்தார்.

‘எப்படி இருக்கு என்ரை கிழவி வேசம். கொஸ்ரியூமிற்கு மாத்திரம் இருநூறு டொலர்கள் செலவாச்சு...’ அந்த முதிய பெண்மணிக்கும் அதையே சொன்னார்.

‘நீங்கள் மாப்பிள்ளையின் உறவினரா?’ அந்தப்பெண்மணி இராசப்புவிடம் கேட்டார்.

‘ஆமாம். மாப்பிள்ளையின் அப்பாவின் நண்பர்.’

‘நான் – மணப்பெண்ணின் அம்மாவின் அக்கா’ சொல்லியபடி இராசப்புவின் ரெலிபோனை வாங்கிப் பார்த்தார் அந்த முதிய பெண்மணி.

‘சும்மா சொல்லப்படாது. அச்சாவா நடிச்சிருக்கிறியள். நானே கிழவி. என்னைவிட உங்கள் நடிப்புப் பிரம்மாதம்’ இராசப்புவின் காதிற்குள் இரகசியம் பேசினார். அவரது ரெலிபோனை வாங்கிக் கொண்டு விறுவிறெண்டு உள்ளே போனார். இராசப்பு ஒரு ஓரமாக நின்று எல்.சி.டி பனலைப் பார்த்த வண்ணம் நின்றார்.

‘மணப்பெண் கூறை மாற்றப் போகின்றார். அந்த நேர இடைவெளியில் உங்களுக்கு ஒரு அதிசயம் காத்திருக்கின்றது. அமைதியாக இருந்து இரசித்துப் பாருங்கள்’ ஒலிபெருக்கியில் அறிவிப்பு வந்தது. இராசப்புவின் கிழவி வேடம் எல்.சி.டி இல் தோன்றியது. வந்த வேலை முடிந்தது என எண்ணிய இராசப்பு, தனது ஐ போனைப் பெற்றுக் கொள்வதற்காக அந்த முதிய பெண்மணியைத் தேடிப் போனார். அவரைக் காணவில்லை. திருமணக் காட்சிகளை ஒளிபரப்புச் செய்துகொண்டிருந்தவரிடம் அந்த முதிய பெண்மணியைப் பற்றி விசாரித்தார்.

‘ஒரு பெண்மணி வந்தவர் தான். ரெலிபோனைத் தந்து நீங்கள் நடித்த அந்த நாடகத்தின் காட்சிகளைப் போடச் சொன்னார். பிறகு அந்த போனை வாங்கிக் கொண்டு போய்விட்டார்.’

‘பெண்மணி... பெண்மணி எண்டு சொல்லாதையுங்கோ... அது மணப் பெண்ணின் அம்மாவின் அக்கா’ பதட்டத்துடன் சொன்னார் இராசப்பு.

‘எனக்கு மணப்பெண்ணின் குடும்பத்தினரை நன்றாகத் தெரியும். மணப்பெண்ணின் அம்மாவுக்கு அக்கா இல்லை.’ அவர் கெக்கட்டம் விட்டுச் சிரித்தார்.

‘அப்ப என்ரை போன்? வெயர் இஸ் மை போன்?’ இராசப்பு தலையைப் போட்டு விறாண்டினார். அது புறாக் கூடு போல விரிந்தது.

‘அப்ப கிழவி வேடம் போட்டது ஆர்?’ கோபத்துடன் கத்தினார் இராசப்பு. ‘அது நீர் தான்’ என்றார் அவர்.

---

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மீண்டும் இணையும் தமிழ்க் கட்சிகள் பழைய பாதையில்தான் பயணமா?

கூட்டமைப்பும் அதனுடைய சுமார் இரண்டு தசாப்த கால வரலாற்றில் சாதித்ததாக எதுவும் இல்லை.

2009 இல் போர் முடிவுக்கு வந்த போது, விடுதலைப் புலிகளிடமிருந்த தலைமை கூட்டமைப்பிடம் சென்றது. ஆனால், இன்றுவரையில் தமிழர்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் கூட்டமைப்பு சாதித்ததாக எதனைக் கூற முடியும்?

திலீபனுடைய நினைவேந்தலுடன் இணைந்திருக்கும் 10 தமிழக் கட்சிகளில், ஏழு கட்சிகள் கடந்த காலத்தில் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து வந்தவைதான். கூட்டமைப்புத் தலைமையின் அணுகுமுறை, அமைப்பு ரீதியாக அதனைக் கட்டியெழுப்பாத நிலை, தனிநபர்களின் ஆதிக்கம், கூட்டமைப்பு ஒன்றுக்கு இருக்க வேண்டிய தார்மீகப் பொறுப்புடன் தமிழரசுக் கட்சி செயற்படாமை என்பனதான் அந்த ஏழு கட்சிகளும் பிரிந்துசென்றமைக்குக் காரணம்.

தற்போதும் கூட்டமைப்புடன் இணைந்திருக்கும் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் என்பன கடுமையான அதிருப்தியுடன்தான் அங்கிருக்கின்றன என்பது இரகசியமானதல்ல. அதனைவிட தமிழரசுக் கட்சிக்குள்ளும் பல பிச்சல் – பிடுங்கல்பாடுகள். இந்த நிலையிலும் பழைய கட்சிகள் மீண்டும் இணைந்திருக்கின்றன. கடந்தகால தோல்விகளிலிருந்து சரியான பாடங்களைப் படித்து அதற்கேற்றவாறு அணுகுமுறைகளையும், அமைப்பு முறைகளையும் மாற்றிக் கொள்ளாமல் செயற்பட்டால் பழைய நிலைதான் மீண்டும் ஏற்படும்.

ஆகஸ்ட் பொதுத் தேர்தலில் கிடைத்த படுதோல்விதான் இவ்வாறான கூட்டணி ஒன்றை உருவாக்க மாவை சேனாதிராஜாவைத் தூண்டியது என்பது உண்மை. வரப்போகும் மாகாண சபைத் தேர்தல் குறித்த அச்சம் இந்த நிர்ப்பந்தத்தை மேலும் அதிகப்படுத்தியிருக்கின்றது. மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடுவதற்கான திட்டத்துடன் தான் இந்த காய் நகர்த்தலை மாவை முன்னெடுக்கின்றார் எனத் தமிழ்க் கட்சிகள் கருதுகின்றன. ஆக, இதுவும் தேர்தலை இலக்காக வைத்த ஒரு கூட்டணிதானா?




அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



# ஆமாசாமி



● மாதவி

நானும் மருமகளும் ரயிலுக்காகக் காத்திருக்கின்றோம். இருவரும் நண்பர்களாக மனம்விட்டு பேசுவோம். வீடுவாங்குவதில் இருந்து நாய்க் குட்டிக்கு என்ன பெயர் வைப்பது வரை அலசுவோம்.

இப்போ ரயில் வந்தது ஏறிக்கொண்டோம்.

அட அரவிந்! உன்னைக்கண்டு எத்தனை நாள். சரி பரவாயில்லை மறக்காமல் மகளின் திருமணத்திற்கு அழைப்பு அனுப்பியிருந்தாய். நேற்று கிடைத்ததில் இருந்து உன்னைப்பற்றித்தான் வீட்டில் பேச்சு. சரி நல்ல இடத்தில் மாப்பிள்ளை கிடைத்திருக்கிறார். நல்ல படிப்பு குணம் வேறு என்ன வேணும்! ஒன்று தெரியுமே உன்னுடைய சம்மந்தி என்னுடன் ஒன்றாகப் படித்தவன் என்றேன்.

அரவிந் முகத்தில் எனக்கிருந்த மகிழ்ச்சியில்லை. நான் கவனிக்கவில்லை மருமகள் தான் கவனித்து கண்யாடைக்காட்டினாள். [கொரோனாக் காலம். முகம் பார்த்து எதுவும் அறியமுடியாது. முகக்கவசம் மூடிக்கிடக்கிறது. எல்லாம் கண்பாசைதான்.] உடன் என்னை சுதாகரித்துக்கொண்டு என்னடா! அரவிந் ஒரு மாதிரியாய் இருக்கிறாய், ஏதும் காதல் கீதல் பிரச்சினையா என்றேன்.

சீச்சீ அப்படி ஏதும் இல்லை. சீதனம் என்றான்.

அட வெளிநாட்டிலுமா! இந்தக் கண்றாவி என்றேன். என்ன செய்வது ஒரு பெண் பிள்ளை தானே எனக்கு, கேக்கிறதைக் கொடுத்து கட்டி வைக்கின்றேன்.

எப்படி என்றாலும் இங்கு என்ன குறை, சீதனம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. மனம் ஒத்துப்போனால் சீ! தனம் பாராமல் கட்டி வைக்க வேண்டியது பெற்றவர்களின் கடமை தானே என்றேன்.

அவனும் தலையாட்டி ஆமோதிக்க ரயில் வண்டி தரிப்பிடம் நின்றது. நானும் மருமகளும் அடுத்த வண்டிக்காக சுரங்கப்பாதையால் ஓடி மறுபக்கம் வரும் வண்டியில் ஏறினோம். அட இவன் சந்தானம்! இப்பதானடா உன்னைப் பற்றி உன்னுடைய சம்மந்தியுடன் வந்த ரெயிலில் கதைத்துக்கொண்டு வந்தேன்.

நான் இப்ப மாறி இதில் ஏறுகிறேன், நீ இங்கை இருக்கிறாய். கலியானவீடு மகனுக்கு, மறக்காமல் நீயும் அழைப்பிதழ் அனுப்பியிருந்தாய். நல்ல பெண் படித்தவள், குணமானவள் உன்னுடைய சம்மந்தி அரவிந் எனக்கு தூரத்து உறவும்கூட என்றேன்.

இம்முறை மருமகள் யாடை எதுவும் காட்டவில்லை நானே சந்தானத்தின் முகத்தை பார்த்துப் புரிந்துகொண்டேன். ஏதோ சிக்கல் அங்கு தெரிந்தது.

என்னடா! அரவிந் உன்னுடைய சொந்தம் என்கிறாய் சுத்த நப்பியாய் இருப்பார் போல் இருக்கு. ஒரு பெண் பிள்ளையை வைத்துக் கொண்டு காசு கண்ணிலும் காட்டமாட்டார் என்கிறார். சீதனமாய் கொஞ்சம் தரலாம்தானே. நாம் என்ன சும்மாவா பிள்ளையை படிப்பித்தது.

சரிதான் சந்தானம். அங்கை எண்டால் என்ன! இங்கை எண்டால் என்ன, எங்கள் வாழ்க்கை முறை மாறவில்லைத்தானே. எத்தனை கடை ஏறி அங்கு ஒரு செருப்பு வாங்குவோம், இங்கை வந்து அது மாறிவிட்டதே! இங்கேயும் பார் எத்தனை ரெயில் ஏறி நானும் மருமகளும் செருப்பு வாங்கத்தான் போய்கொண்டு இருக்கிறோம். சிக்கனம் பணம் சேர்ப்பு எல்லாம் எங்கள் பிள்ளைகளுக்காத்தானே! நீ கேட்கிற சீதனம் தந்தால் என்ன குறை. வாங்கிறதை வாங்கலாம் இல்லாதவையிட்டை வாங்கினால்தான் பிழை.

சந்தானம் தன் மனவருத்தத்தை சொல்லி முடிவு கேட்டகமுன் ரயில் பயணம் முடிந்து விட்டது. சரி ஒன்றுக்குள் ஒன்று சமாளிப்போம் என்றபடி நகர்ந்தார் சந்தானம்.

மருமகள் அசைவில்லை! அப்படியே விறைத்துப் போய் நின்றாள். என்ன கால் விறைத்துப் போச்சே! அப்படி என்றால் கொஞ்சநேரம் இங்கு நின்றுவிட்டு நடப்போம் என்றேன்.

இல்லை மாமா!

நீங்கள் யார் என்று நினைத்து விறைத்துப் போனேன்!

இருவருக்கும் அவர்களுக்கு ஏற்றமாதிரி கதைத்து நீங்கள் அவர்களுக்கு நல்வராக காண்பித்துவிட்டீர்கள்.

ஆனால் எனக்குப் பயமாக இருக்கிறது மாமா! அப்படி என்றால் நீங்கள் யார். ஆளுக்கு ஆள் எற்ற மாதிரி உங்கள் கருத்தை சொல்லும் உங்களுக்கு, உங்களுக்கும் என்று ஒரு கருத்து இருக்கும் அல்லவா! அதனை என்னால் உணர முடியாமல் இருக்கிதே! என்றாள் மருமகள்.

மருமகளுக்கு என்னைப் புரியவில்லை. அது சரி ஆனால் எனக்கும் என்னைப் புரியவில்லையே! அப்படி என்றால் நான் யார்.

ஆமாசாமியா!



# உங்கள் வாழ்வில் வெற்றிமணிகள் ஒலிக்கட்டும்!



## இசைப்பணி தொடர வெற்றிமணி வாழ்துகிறது!

### கலை லயஞானமணி சண்முகலிங்கம் தேவகுருபரன்

தபேலா தாளவாத்தியக் கலைஞர்,கலை லயஞானமணி, சண்முகலிங்கம் தேவ குருபரன் அவர்கள் 35வருடங்களுக்கு மேலாக கலைத்துறையில் பணியாற்றி வருபவர், தமிழ் யேர்மனிய இசைகலைஞர்களுடன் பலதுறை தாளவாத்திய கலைராகபணியாற்றிவருகிறார். சிறப்பாக அண்மையில் NRW,landes Musik Akademie,köln பல்கலைக்கழகத்தில் இசை ஆசிரியர் musik pädagogik. தராதரப் பட்டபடிப்பினை பூர்த்திசெய்து யேர்மனிய பாடசாலையில் இசை ஆசிராகப் பணியாற்றி வருகிறார். இவரது இசைப்பணி தொடர வெற்றிமணி வாழ்துகிறது.

**பல்கலை கலாச்சார தாளவாத்திய இசை ஆசிரியர் பட்டப்படிப்பு துறையின் சிறப்பு சான்றிதழ் திரு. தேவகுருபரன்- (தபேலா) அவர்கள் பெற்றார்.**

---

# இலங்கைத் தமிழ்ப் பெண்களுக்கு உரையாசிரியர் புலியூர்க்கேசிகன் விருது

இந்தியாவில் வெள்ளிவிழாக்கண்ட உரையாசிரியர் புலியூர்க்கேசிகன் இலக்கியப் பேரவை சார்பாக அதன் 26ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் இப்பேரவையினால் வழங்கப்பட்ட 22 விருதுகளில் இலங்கையைச் சேர்ந்த ஏழு பெண்கள் மூவகையான விருதுகளைப் பெற்றுள்ளனர்.

இவ்விருதானது தனித்தமிழ் இயக்கத்தின் தந்தையும் தமிழ் பேசும் நல்லுலகம் போற்றும் தமிழறிஞர் மறைமலையடிகள் அவர்களின் கொள்ளுப் பெயர்த்தியும், தமிழறிஞர் நீலாம்பிகை அம்மாவின் பெயர்த்தியும், உரையாசிரிர் புலியூர் கேசிகன் மகளுமாகிய தமிழம்மை கலைச்செல்வி அவர்களால் அவர் நடாத்தி வருகின்ற உரையாசிரியர் புலியூர்க்கேசிகன் இலக்கியப் பேரவையினால் வழங்கப்பட்டது.



பொலிகையூர் ரேகா



திருமகள் தவேந்திரன்



சசிகலா ரமேஷ்



திவ்யா சுஜேன்



வலன்ரீனா இளங்கோவன்



பாமினி



கௌரி பாபு

தமிழுக்காய் உழைத்த மறைமலையடிகளார் வழியில் நான்காம் தலைமுறையாய் நற்றமிழ்ப் பணியாற்றி வரும் தமிழம்மை கலைச்செல்வி அவர்கள் தமது இலக்கியப் பேரவையினூடாக திறனாளர்களை இனங்கண்டு ஆண்டு தோறும் விருதுகளை வழங்கி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் இலங்கையைச் சேர்ந்த ஏழு பெண்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு ‘தமிழேந்தல்’, ‘அறிவேந்தல்’ மற்றும் முத்தமிழேந்தல் ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன. தற்போதைய சூழ்நிலை காரணமாக விழா நடாத்த முடியாததால் விருதுகள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**விருது பெற்றோர் விபரம்:**

1. பொலிகையூர் ரேகா- தமிழேந்தல் விருது
2. திருமதி திருமகள் தவேந்திரன்- தமிழேந்தல் விருது
3. திருமதி கலாநிதி வலன்ரீனா இளங்கோவன்- அறிவேந்தல் விருது
4. திருமதி பாமினி- அறிவேந்தல் விருது
5. திருமதி கலாசூரி திவ்யா சுஜேன்- முத்தமிழேந்தல் விருது
6. திருமதி கௌரி பாபு- அறிவேந்தல் விருது
7. திருமதி சசிகலா ரமேஷ்- அறிவேந்தல் விருது

**விருது பெற்றவர்களை வெற்றிமணி வாழ்த்தி மகிழ்கிறது.**







அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்




# 'எங்கடை நாய் ஒவ்வொரு கதவாய் விறாண்டுது'

கனகசபேசன் அகிலன்
(இங்கிலாந்து)

1987 ஆம் ஆண்டு, வழமை போல் பாடசாலை முடிந்து யாழ் இந்து மகளீர் பாடசாலையை தாண்டி...[நம்புங்கள், இது நான் வழமையாகப் போகும் வழி, வேம்படி, சுண்டுகுழியெல்லாம் சுற்றி கடைசியாக இங்கு வந்து சேரவில்லை...]. பாடசாலையைத் தாண்டியவுடன் இடது பக்கத்தில் வரும் சிறு ஒழுங்கையூடாகச் சென்று பலாலி வீதியில் மிதக்கின்றேன்...

இந்திய இராணுவ வாகனங்கள் வரிசையாகச் செல்கின்றன, வீதியோரம் நின்று மக்கள் கை காட்டி குதூகலிக்கின்றார்கள்... ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமோ? என்று மனதில் சந்தேகம் கலந்த சந்தோசம்... அமைதி காக்க வந்த படையென்றல்லவோ பெயர் வைத்திருந்தார்கள்... இருந்தாலும், ஏதோ ஒரு கூறமுடியாத குழப்பம்... சில மாதங்களில் சிறிது சிறிதாக நிலைமை மோசமாகியது... அதே பலாலி வீதியை அணுகும்போது 'வந்து துலைக்கப்போறாங்களோ?' என்று மனதில் ஒரு பீதி...அந்த நிலை இன்னும் மோசமாகி போற வாறவர்களையெல்லாம் இராணுவம் மறித்து சோதனை செய்யத் தொடங்கியது...தப்பி ஒரு மாதிரி வீட்டுக்குச் சென்றால் அங்கும் இராணுவத்தின் நெருக்கடி.

எனது கிராமம் நீர்வேலி, எனது வீடு இருந்த இடத்திலும் [தெற்குப் பகுதி] அடிக்கடி இராணுவத்தின் முற்றுகை நடக்கும், கால நேரம் கிடையாது... காலையில் இராணுவத்தின் துப்பாக்கிக்கு முன் நின்று பல் விளக்கிய நாட்கள் பல... இப்படி நிலைமையிருக்கையில் ஒரு நாள் யாழ்ப்பாணத்திலிருந்து பாடசாலை முடிந்து வீட்டுக்கு சைக்கிளில் வருகின்றேன்... அப்பா படபடப்புடன் என் வருகையைப் எதிர்பார்த்து வாசலில் நிற்கின்றார்...

அவரது முதல் கேள்வி...'வரேக்கை ஆமிற்றை பிடிபட்டனியே?' 'இல்லையப்பா...ஏன் ?' என்று அவரிடம் நான்... 'ஆ...அப்ப தப்பீற்றாய்...சரி, பள்ளிக்கூட பாக்கை என்னட்டை தந்திட்டு கெதியாய் அரசகேசரி பிள்ளையார் கோயில் பக்கமாய்[நீர்வேலி மத்தி] எங்கையாவது ஓடு...இப்போதைக்கு திரும்ப வராதை'... 'ஏனப்பா? ஆமி இஞ்சை வந்தவங்களே?' அவரிடம் கேட்டேன் 'இல்லை இனி தான் வரப் போறாங்கள்...' 'உங்களுக்கு யாராவது சொன்னவையளே?' திரும்பவும் நான்... 'எங்கடை நாய் ஒவ்வொரு கதவாய் விறாண்டுது, தெரியேலையே...அங்கை பார்...' என்று நாயை காட்டினார். நானும் நிலமையை உணர்ந்து உடனே அங்கிருந்து ஓடிவிட்டேன். அந்த நேரத்தில் தொலைபேசி இல்லை, இராணுவம் வருவதை அயலவர்களோ அல்லது என்னைப்போல் ஓடிவரும் நண்பர்களோ சொன்னால் தான் தெரியும்...

அப்படி எவரும் சொல்லவில்லையெனில், எமது வீடுகளில் உள்ள நாலுகால் கடவுள்கள் எப்படியோ எதையோ வைத்து மோப்பம் பிடித்து [இராணுவம் உண்ணும் கடலை எண்ணெய் எனக் கேள்வி] தானும் அவர்களிடமிருந்து தப்ப, வீட்டு கதவை கால்களால் விறாண்டி உள்ளே வர கடுமையாக எத்தனிப்பார்கள்... அது தான் எங்களுக்கு கடைசி அறிவிப்பு ... அன்று, மூன்று நாலு மணித்தியாலங்களாக நண்பர்களுடன் அரட்டையடித்துவிட்டு, இருட்டியவுடன், வீட்டுக்கு திரும்ப வருகிறேன், அப்பா சிறிது கவலையாக இருக்கின்றார்...

'ஏனப்பா ஆமி அடிச்சவங்களே?..என்ன கேட்டவங்கள்?' 'இல்லை...பிள்ளையள் எங்கையெண்டு கேட்டாங்கள், நான் பள்ளிக்கூடமெண்டு சொன்னன்...உங்களுக்கு என்ன பிரச்சனை? எண்டு கேட்டான்... நான் ஒன்றும் பேசேல்லை... கொஞ்ச நேரத்தில் அவனே 'வீடுகளிலெல்லாம் கிணறு, தண்ணிடாங், பாத்தி கட்டி மரங்களுக்கு தண்ணி விடுகிறியள்...பாத்தி கட்டேக்கை ரேடியோவிலை உங்களுக்கு பாட்டு வேறை... நாங்கள் அங்கை குடிக்கவே தண்ணியில்லாத இடத்திலை எவ்வளவு சந்தோசமாய் இருக்கிறம்...

'உங்களுக்கு இஞ்சை பிரச்சனை'...என்று தாறு மாறாய் பேசிப்போட்டு போறாங்கள்... 'அப்பா...அவன் கிடந்தான்...' என்று நான் சமாதானப்படுத்தியும் அவர் இன்னமும் ஏதோ குழப்பத்தில்... பின்பு அவராகவே..'அவங்களில்லே என்றை ரேடியோவை தரச்சொல்லி கேட்டவங்கள்...முகாமிலை பாட்டு கேட்க தேவையாம்...ஒரு மாதிரி இழுத்து மறைச்சு வைச்சிட்டன் ...' என்று மிகுந்த கவலையுடன்... நான் மனதுக்குள் நினைத்தேன்...'சீ, இண்டைக்கும் இந்த ரேடியோ தப்பீட்டுது...வந்தவங்கள் இதை கொண்டு போயிருக்கலாம்'... அப்படி நான் நினைத்ததற்கு காரணம்...அப்பாவிற்கு அந்த ரேடியோ வலக்கை மாதிரி[கிட்டத்தட்ட படத்தில் உள்ளது போல்], அவர் செல்லுமிடமெல்லாம் அதுவும்...எப்ப பார்த்தாலும் அதில் பழைய பாடல்கள் தான் 1950,60,70களில் வந்த பாடல்கள்...நான் 'அந்தி மழை பொழிகிறது' பாட விட்டால் அவர் 'உதெல்லாம் ஒரு பாட்டோ' என்று என்னை பேசி விட்டு மீட்டரை மாற்றி 'அதோ அந்த பறவை போல..' பாட விடுவார். இப்படியே...'ஒரு ராஜா ராணியிடம்...பரம சிவன் கழுத்திலிருந்து...முத்துக்கு முத்தாக...அண்ணன் என்னடா தன்பி என்னடா...' நான் கேட்காத பழைய பாடல்களே இல்லை...இது போதாதென்று பாடல்களுக்கு விளக்கம் வேறு சொல்லுவார்.

நல்ல காலம் 'ஒட்டகத்தை கட்டிக்கோ'...'சிக்குபுக்கு சிக்குபுக்கு ரெயிலு' பாடல்கள் வரும் போது அவர் உயிரோடு இல்லை ! அந்த ரேடியோவை தூக்கி ஏறிய வேண்டும் போலிருக்கும்...இப்போது, பல வருடங்களுக்குப் பிறகு அப் பாடல்களை முணுமுணுக்கும் போது நினைத்துப் பார்க்கிறேன்...காலத்தை கடந்த அன்றைய பாடல்களில் பல அதிசயங்கள் தான்! அவற்றை ஆக்கி எமக்குப் படைத்தவர்களும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்! இதற்கு இன்னொரு படி மேல் சென்று சிந்தித்தோமேயானால்...நான் எந்தப் பாட்டு போடலாம் என்று அடிபட்ட, தூக்கியெறிய நினைத்த அந்த ரேடியோவை, தன் வாழ் நாளில் பல வருடங்களை செலவளித்து கண்டு பிடித்தவரை பற்றி ஒரு கணம் கூட நான் சிந்திக்கவில்லை.

இப்படி தான் நாம் அன்றாடம் உபயோகிக்கும் பல பொருட்களும் – அவை எமக்கு வழங்கப்பட்ட படியால் அவற்றை நாம் ஒரு பொருட்டாகவே எடுப்பதில்லை, 'அது ஏன் அப்படி செய்யவில்லை, இப்படி செய்யவில்லை' என்று மேலும் மேலும் குறைகளை காணும் சமுதாயமாகவே வளர்ந்து கொண்டிருக்கின்றோம் ! ஒவ்வொரு பொருளையும் ஆக்கியவரைப் பற்றியும் அவர்கள் பட்ட சிரமத்தையும் சிறிது அறிந்து கொண்டால் அந்த பொருள் மீதும் அவர்களின் மீதும் ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்படும். பொருட்கள் மட்டும் கண்டுபிடிக்கப்படவில்லை ஒவ்வொரு மனிதர்களும்கூட கண்டுபிடிக்கப் படுகிறார்கள்!

28 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



# யாழ். பல்கலைக்கழக மாணவனின் மூன்று புதிய கண்டுபிடிப்புகள்

## கொரோனா வைரலிருந்து பாதுகாப்பதற்கு இவை பெரும் உதவியாகலாம்

யாழ்.பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பபீடத்தில் Electro Engineering Technology படிக்கும் இரண்டாம் வருட மாணவனான சோமசுந்தரம் வினோஜ்குமார் அவர்களினால் கொரோனா வைரலிருந்து பாதுகாப்பதற்கான மூன்று புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்துள்ளார்.

தனிமைப்படுத்தல் நிலையத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள கொரோனா வைரஸ் தொற்றுள்ள நோயாளிகளிடமிருந்து வெளியில் வைரஸ் பரவாமல் இருப்பதற்குரிய Emergency Safety Box for Corona virus எனும் கண்டுபிடிப்பும், கொரோனா வைரஸிக்கள் 80 நனோமீற்றர் தொடக்கம்


சோமசுந்தரம் வினோஜ்குமார்

120 நனோமீற்றர் விட்டத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது. அதே விட்ட அளவுகளிலான கதிர்வீச்சினால் அழிக்கக்கூடிய

மூலம் மனித உடல்கள் அல்லத பிற பொருட்களை இக் கருவியின் மூலம் சுத்தம் செய்ய முடியும். இதில் கதிர்வீச்சினால் மனித உடலுக்குச் செல்லாமல் தடுப் பதற்குரிய விசேட Sensors இருப்பது விசேட அம்சமாகும்.

மூன்றாவது கண்டுபிடிப்பாக, பொதுவாக கொரோனா வைரஸிக்கள் சுவாசம் மூலமும் கைகளின் தொடுகை மூலமாகவும் பரவுகிறது. சுவாசம் மூலமாக பரவுவதைத் தடுப்பதற்கு முகக்கவசங்களை அணிகின்றோம். கைகளினால் பரவுவதைத் தடுப்பதற்கு இலகுவாக எல்லாராலும் பயன்படுத்தக்கூடிய Safety Hand Gloves for Corona virus எனும் கையுறைகளையும் உருவாக்கியுள்ளார். இந்த கையுறைகள் இரு பக்கங்களும் திறந்தவெளியைக் கொண்டுள்ளதாக இருப்பதாலும் தேவைக்கேற்ப வடிவங்களை மாற்றிக்கொள்ள முடிந்தாலும் எந்த நேரத்திலும் பயன்படுத்த முடியும்.

இம் மூன்று கண்டுபிடிப்புக்களுடன் மொத்தமாக இதுவரை 102 கண்டுபிடிப்புக்களைச் செய்துள்ளார். இதுவரை 43 தேசிய விருதுகளையும் ஐந்து நாடுகளுடைய சிறப்பு விருதுகளையும் ஆறு சர்வதேச விருதுகளையும் பெற்





கருவியான Radiation Range Killer for Corona virus எனும் கண்டுபிடிப்பும். இது மற்றைய க்ங கதிர்வீச்சுக்கள் அல்லாமல் விசேடமாக வைரஸின் விட்டத்துக்காக தயாரிக்கப்பட்டதாகும். இதன்

றுள்ளார். இவர் சம்மாந்துறை சிறி கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.






# நடுக்கம் கைநடுக்கம் போன்றவை ஏற்படுவது ஏன்?



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

Dr.IN

## நடுக்கம் என்றால் என்ன?

பனி சூழ்ந்த போதில் கடும் குளிரில் உடல் நடுங்குவதைக் கூறலாம். அதே போல சில காய்ச்சல்களும் நடுக்கத்துடன் வருவதுண்டு. மலேரியா சிறுநீர்த் தொற்று, செலுலைடிஸ் போன்றவை அதற்கு உதாரணங்களாகும். இந்த வகை நடுக்கத்தை ஆங்கிலத்தில் shivering என்பார்கள்.

பயத்தினால் நடுங்குவது மற்றொன்று.

இவற்றைத் தவிர மற்றொரு நடுக்கமும் உண்டு. விரல்களும் கைகளும் நடுங்குவது. கோப்பை பிடித்தால் கிடுகிடுவென நடுங்கி தேநீர் தரையில் சிந்தும், சேவ் செய்யும்போது கை நடுங்கி சொக்கையை ரணமாக்கிவிடும், சமையலறையில் பாட்டியின் கை நடுங்கி பாத்திரங்கள் பொத் பொத்தென விழுங்கி நொருங்கும்.

பொதுவாக வயதானவர்களில் கண்டிருப்பீர்கள். சில நோய்களாலும் வருவதுண்டு. மருத்துவத்தில் tremors என்பார்கள்.

ஒருவரது விருப்பின்றி தாமாகவே உடலின் சில உறுப்புகள் நடுங்குவதை அவ்வாறு கூறலாம். பொதுவாக விரல்களில் ஏற்படும். வயதானவர்களிலும் நடுத்தர வயதினரிடையேயும் அதிகம் காணப்படும் என்றபோதிலும் எந்த வயதிலும் ஏற்பட வாய்ப்பு உண்டு. விரல்களில் மாத்திரமின்றி கைகள், தலை முகம் உதடுகள் குரல்வளை உடல் என எங்கும் ஏற்பட வாய்ப்புண்டு.

ஒருவர் தான் அதைச் செய்ய வேண்டும் என்று எண்ணாத போது அதாவது சுயவிருப்பின்றி அவரது முயற்சியும் இன்றி எதிர்பாராது ஏற்படுவதே இத்தகைய நடுக்கம் ஆகும். தசைகளின் அசைவியக்கத்தை கட்டுப்படுத்தும் மூளையும் நரம்பு மண்டலமும் தான் இதற்குக் காரணமாகும். பல வகைகள்

மூன்று முக்கிய வகைகள் உண்டு.

முதலாவது வகை ஒருவர் எதுவும் செய்யாது வாழாதிருக்கும்போது ஏற்படும் நடுக்கமாகும் இதை resting tremors என சொல்லுவார்கள். அத்தகைய நடுக்கம் அவர் ஏதாவது செய்ய முனையும்போது தற்காலிகமாகத் தணிவதுண்டு. சாதாரணமாக கை நடுக்கம் உள்ள ஒருவர் எழுத முனையும் போது அல்லது ஒரு பொருளைப் பற்ற முயலும்போது இத்தகைய நடுக்கம் தணியும். இதற்கு முக்கிய உதாரணம் பார்க்கின்சன் (Parkinson's disease) நோயாகும்.

இந்நோயின் போது அவரது இயக்கம் மெதுவாவதுடன் நடையும் தளும்பலாக இருக்கும். சில ஈரல் நோய்கள், நடுமூளையில் பக்கவாதம் போன்றவை ஏனைய காரணங்களாகும். வேறு சில நடுக்கங்கள் ஒருவர் ஏதாவது செய்ய முனையும் போது மோசமாகும். இதை Intention tremors என்பார்கள். உதாரணமாக ஒரு பொருளைப் பற்ற முனையும் போது அல்லது எழுத முனையும்போது நடுக்கம் மோசமாகும். மூளையின் செரிபல்லம் பகுதியில் ஏற்படும் நோய்களால் இவை ஏற்படும். இன்னும் சில நடுக்கங்கள் எந்நேரமும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கும். Action tremors என்பார்கள். இவற்றில் சில ஏதாவது ஒரு புறத்தில் மட்டும் இருப்பதுண்டு. உதாரணமாக இடது கை நடுங்கும் ஆனால் வலது பக்கத்தில் எதுவும் இருக்காது.

நடுக்கங்களில் பல காரணம் சொல்ல முடியாதவை ஆகும்.

இவற்றில் பல பரம்பரை பரம்பரையாக வருவதுண்டு. காரணம் சொல்ல முடியாத நடுக்கங்களில் பல 65 வயதிற்கு பின்னரே ஆரம்பிக்கும். ஆயினும் பரம்பரையில் தோன்றுபவை நடுத்தர வயதிலேயே தோன்றுவதுண்டு.

பெற்றோரில் ஒருவருக்கு இருந்தாலே பிள்ளைகளுக்கு வர வாய்ப்புண்டு. ஆனால் எல்லாப் பிள்ளைகளுக்கும் வரும் என்றில்லை. கை நடுக்கம் மட்டுமின்றி தலை ஆடுவது குரல் நடுங்குவது போன்றவையும் பரம்பரையில் வரலாம்.







## மருந்துகளால் நடுக்கம்

'எனக்கு நேற்றிலிருந்து கை நடுங்குகிறது' என ஒரு நோயாளி சொன்னார். திடீரென ஏன் ஏற்பட்டது? 'ஏதாவது மருந்துகள் புதிதாக உபயோகிக்க ஆரம்பத்தீர்களா' எனக் கேட்டபோது 'எனக்கு ஒரு வருத்தமும் இல்லை' என்றவர் சற்று யோசித்துவிட்டு 'இருமல் சிரப்' 'ஒன்று குடித்தனான்' என்றார்.

ஆம் பல மருந்துகள் நடுக்கங்களுக்கு காரணமாகினறன. ஆஸ்த்மா நோய்க்கு உபயோகிக்கும் பல மருந்துகள் காரணமாகலாம். Terbutaline. Salbutamol, Theophylline போன்றவை முக்கியமானவை. இம் மருந்துகள் சுவாசக் குழாயை விரிவுபடுத்தி சளி இலகுவாக வெளியேறுவதற்கு உதவுகின்றன. இதனால் பல இருமல் சிரப் மருந்துகளில் குறைந்த அளவில் கலந்துள்ளன.

ஸ்ரோயிட் வகை மருந்துகள் (eg Prednisolone, betamethasone) பலவகையாகும்.

நன்றி: ஹாய் நலமா

28 ஆம் பக்கம் பார்க்க...






கௌசி

# சித்திரக்கவி

மனதுக்குள் மகிழ்ச்சியை ஏற்படுத்துவன இலக்கியங்கள். எனவே மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அனைத்துக் கலைவடிவங்களையும் இலக்கியங்கள் என்று கூறலாம். சொல்லை கவிதையாக்கினால் மகிழ்ச்சி. அக்கவிதையைப் பாடலாக்கினால் மகிழ்ச்சி. அப்பாடலை நடனமாக்கினால் மகிழ்ச்சி. அப்பாடலை நடித்தால் மகிழ்ச்சி இவ்வாறு சொற்கள் பல வடிவங்களை எடுத்துக் கொள்ளுகின்றன. இவ்வாறு சொல்லே எழுத்தோவியமானால் அதுவே சித்திரக்கவி. ஓவியம் மனதுக்குள் ஒரு கதை சொல்லும். காட்சிப்படிவத்தை ஏற்படுத்தும்.


உலகப் புகழ் பெற்ற ஓவியர் லியானாடோர் டாவின்சியின் ஓவியம் பற்றி அறிந்திருப்பீர்கள். அவை பல மர்மங்களை எதிர்காலத் தலைமுறைக்கு சொல்லிச் சென்றதை அறிந்திருப்பீர்கள். இவருடைய லாஸ்ற் சப்பர் [**Last supper**] என்னும் ஓவியம் பல மர்மங்களை மறைந்திருந்தது. அதில் ஒன்று அப்படத்தில் காணப்பட்ட ரொட்டித் துண்டுகளை இணைத்துப் பார்த்த போது அது இசைக் குறிப்புக்களைக் காட்டியது. அக்குறிப்புக்களை இசைத்துப் பார்த்த போது பிரபஞ்சத்தின் ஓசை எழுந்ததாக கூறப்படுகிறது. இவ்வாறு ஓவியத்திற்குள் கருத்துக்கள் அடங்கிக் காணப்படும். இலக்கியத்தில் இவர்கள் என்னும் இப்பகுதியில் இவை பற்றி நோக்குவோம்.

முதலில் தமிழில் காணப்படும் இலக்கிய வகையிலே ஒன்றான சித்திரக்கவியை எடுத்துநொக்கினால், திருமங்கையாழ்வார், அருணகிரிநாதர், இராமச்சந்திர கவிராயர், பரிதிமாற்கலைஞர் போன்றோர் சித்திரக்கவி பாடுவதில் வல்லவர்களாகக் காணப்பட்டார்கள். அட்டநாக பந்தனம், எழுத்துவர்த்தனம், மாலை மாற்று என்னும் வகைகள் இதில் இருக்கின்றன.

**அட்டநாக பந்தனம்** என்பது எட்டு நாகபாம்புகள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்திருப்பது போன்று படம் வரைந்து கவிதை ஒன்றை எழுதி அக்கவிதை அந்தப் பிணைப்புக்குள்ளே நுழைந்து அந்தக்கவிதை பொருந்திவருமாறு ஓவியமும் கவிதையும் அமைந்திருப்பதே அட்டநாகபந்தம் என்னும் சித்திரக்கவி. இது பாம்பின் தலையில் தொடங்கி பாம்பின் வாலில் முடிக்க வேண்டும். உதாரணமாக இச்சித்திரத்திலே

**பாரதிக் கெல்லை** பாருக் குள்ளே இல்லை என்னும் சித்திரக்கவி பாடப்பட்டுள்ளது

**எழுத்து வர்த்தனம்** என்பது பாடலுக்குள்ளே எழுத்து வளரும். உதாரணமாக



மாத்திரை ஓரெழுத்துச் சொல்லும், மற்றொன்று
நிரப்பிட நீரிற்பூ ஒன்றாம் – நிரப்பிய வேறோர்
எழுத்துய்க்க வீரராசேந்திரன் நாட்டு
ஆறாம் – காவிரி

மாத்திரை ஓரெழுத்துச் சொல்லும் – கா
மற்றொன்று நிரப்பிட நீரிற்பூ ஒன்றாம் – காவி
வேறோர் எழுத்துய்க்க வீரராசேந்திரன் நாட்டு
ஆறாம் – காவிரி

**மாலை மாற்று** என்பது


பின்புறம் படிக்கும் போது முன்புறம் படிப்பது போன்ற பொருள் தரும்.

தேருவருதே மோரு வருமோ
மோருவருமோ தேரு வருதே

அதாவது தேர் வரும் போது நீர் மோர் வருமோ? மோர் வருகிறது. ஓ தேரும் வருகிறது.

இவ்வாறு சித்திரக்கவி கடினமாக இருந்தாலும் கவிஞர்கள் மனதுக்குள் மகிழ்ச்சியைக் கொண்டுவருகின்றது. இவ்விலக்கிய வகையில் எமக்குள்ளும் பலர் ஓவியக்கலையின் மூலம் இலக்கியம் சொல்பவர்களாக மகிழ்ச்சியை ஏற்படுத்துபவர்களாக இருக்கின்றார்கள். எடுத்துக்காட்டாக வெற்றிமணி பத்திரிகையின் ஆசிரியர் மு.க.சிவகுமாரன் அவர்கள் ஓவியக்கலைஞர் சிற்பக் கலைஞர் என்று அறிந்திருக்கின்றோம். ஓவியம் எவ்வாறு இலக்கியம் சொல்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக இப்படத்தை எடுத்துநோக்குவோம்.

இந்தப் படத்தைப் பார்த்தீர்களானால், அங்கு அழகான பின்னணி வர்ணத்தோடு இரண்டு உதடுகள் இருக்கின்றன. ஒரு உதடு வரைய 3 கோடுகள் வேண்டும். இரண்டு உதடுகள் இருக்கின்றன. மேலே உள்ளது ஆணுடையது. கீழேயுள்ளது பெண்ணுடையது. பெண்ணுடைய உதட்டில் மேல் வரியை எடுத்து ஆணுடைய உதட்டிற்கு மேலே மீசையாகப் போட்டிருக்கின்றார். அதாவது ஆணினுடைய கௌரவம் பெருமை என்பன அவனோடு வாழும் பெண்ணைக் குறித்தே இருக்கின்றன. பெண்ணே அவனுடைய தகுதியை உயர்வுக்குக் கொண்டு வந்து வைத்திருக்கின்றாள். அரசனுக்கு மந்திரிபோல்




மிகுந்த நுட்பமான அறிவுடன் தொழிற்பட்டு குடும்பத்தின் பெருமைக்கு காரணமாகின்றாள். அதனை எடுத்துக்காட்டுவதற்காக அந்த கௌரவமான மீசையை பெண்ணின் மேல் உதட்டில் இருந்து எடுத்திருக்கின்றார். அதேபோன்று ஆணினுடைய உதட்டு நடு வரியை எடுத்து

28 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்




ஆனந்தராணி பாலேந்திரா

# “பிச்சை வேண்டாம்” 1975

நவீன நாடகத்துறையில் நான் கால் பதித்து இவ்வருடம் 45 வருடங்களைப் பூர்த்தி செய்கிறேன். மிக நீண்ட தொடர் பயணம் இது. இந்த நீண்ட பயணத்தில் நான் நடித்த நாடகங்கள், சந்தோசமான தருணங்கள், சந்தித்த சவால்கள், சங்கடங்கள் என்பவற்றை பகிரலாம் என எண்ணியுள்ளேன்.

நாடகப் பின்புலம் எதுவும் இல்லாத ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவள் நான். சிறு வயதில் இருந்தே வாசிப்புப் பழக்கம் எனக்கு இருந்தது. கதைகளில் வரும் உரையாடல்களை ஒரு வானொலி நாடகம் போல நடித்து வாசிப்பேன். இதுவே என்னை பாடசாலை நாடகங்களில் நடிக்க வைத்தது. நான் கொழும்பு – வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலய பழயை மாணவி.

1974ஆம் ஆண்டு எனது 18 ஆவது வயதில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நாடக–உரைச்சித்திரக் கலைஞராக பல வானொலி நாடகங்களில் நடித்து ஓரளவு மக்கள் மத்தியில் அறிமுகமாகிக் கொண்டிருந்த வேளையில்தான் ‘பிச்சை வேண்டாம்’ என்ற முழுநீள நாடகத்தில் பிரதான பெண் பாத்திரம் ஏற்று நடிப்பதற்காக பாலேந்திரா என்னை அணுகினார். அப்போதுதான் நான் முதல் முதலாக பாலேந்திராவை சந்தித்தேன். அவர் அப்போது கொழும்பு கட்டுப்பெத்தை பல்கலைக்கழக தமிழ் சங்கத்தின் தலைவராக இருந்தார்.

எழுபதுகளில் கொழும்பில் நவீன நாடகங்கள் வலு அருந்தலாக மேடையேறிக்கொண்டிருந்த காலம் அது. பெண் நடிகைகளுக்கு மிகவும் தட்டுப்பாடு இருந்தது. தயாரிப்பாளர்கள் பெண் பாத்திரங்கள் இல்லாத நாடகங்களைத் தெரிவு செய்யும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. பெண்கள் மேடை நாடகங்களில் ஆண்களுடன் இணைந்து நடிப்பதை ஏளனமாகப் பார்க்கும் சமூகப் போக்கு நிறைந்த அந்தக் காலத்தில்தான் எனது மேடை நாடகப் பிரவேசம் ஆரம்பமானது.

பாலேந்திரா ‘பிச்சை வேண்டாம்’ நாடகக் கதையைக் கூறிய போது அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. பல கஷ் டங்களுக்கு மத்தியில் மற்றவர்களைச் சார்ந்திராமல் சுயகௌரவத்துடனும், தன்னம்பிக்கையுடனும் துணிச்சலுடன் வாழும் வல்யா என்ற இளம்பெண்ணைப் பற்றிய கதை அது. எனக்கு நடிப்பில் மிகுந்த ஆர்வம் என்பது எனது அப்பா அம்மாவுக்கு நன்கு தெரியும். நான் நடிப்பதற்கு எந்தத் தடையும் சொல்லாமல் அவர்களும் சம்மதித்தார்கள். பிச்சை வேண்டாம் நாடகம் ரஷ்;ய நாடகாசிரியர் அலெக்ஸி ஆர்புசோவ் எழுதிய **‘It Happened in Irkutz’** என்ற நாடகத்தின் தமிழாக்கம். தமிழில் மொழிபெயர்த்தவர் ஞானம் லம்பேர்ட் அவர்கள். அ.தாசீசியஸ் அவர்கள்தான் இந்த நாடகத்தை நெறியாள்கை செய்தார். பாலேந்திரா எல்லா நடிகர்களையும் கண்டு பிடித்து, ஒத்திகைகளுக்கான ஒழுங்குகள் செய்து, ஒரு தயாரிப்பாளராக, இணைப்பாளராக மட்டுமல்லாது ஒரு நடிகராக விக்ரர் என்ற பாத்திரத்திலும் நடித்தார்.

‘பிச்சை வேண்டாம்’ நாடகத்தில் ஐந்து பெண் பாத்திரங்கள். இலங்கை வானொலி நடிகையான சந்திரப்பிரபா மாதவன் ஒரு பெண்பாத்திரத்தில் நடித்தார். பல்கலைக் கழக மாணவிகள் இருவர் மற்ற இரு பாத்திரங்களில் நடித்தார்கள். ஐந்தாவது பெண் பாத்திரத்திற்கு ஒருவரும் கிடைக்காமல் ஜேசுதாசன் என்ற மாணவரே பெண்ணாக நடித்தார். இந்த நாடகத்தில் நடித்த ஏனைய நடிகர்கள் எல்லோருமே கட்டுப்பெத்தை பல்கலைக் கழக மாணவர்கள். ஒத்திகையின்போதுதான் அவர்கள் எல்லோரும் எனக்கு அறிமுகமானார்கள்.





மிக நீண்ட ஒத்திகைகளுக்குப் பின் ‘பிச்சை வேண்டாம்’ நாடகம் முதல் முறையாக 29–06–1975 அன்று கொழும்பில் மேடையேறியது. மண்டபம் நிறைத்த சுமார் 1000 பார்வையாளர்கள் முன் மேடையேறி இந்த நவீன நாடகத்தில் நடித்தது எனக்கு ஒரு புதிய சந்தோசமான அனுபவமாக இருந்தது.

இந்த சந்தோஷங்களுடன் சங்கடங்களும் கூட வந்தன. எனது உறவினர்கள் சிலரும் அப்பாவின் சில நண்பர்களும் என்னை மேடை நாடகத்தில் நடிக்கவிட்டது தவறென்று எனது பெற்றோரைத் திட்டினார்கள். வானொலி நாடகங்களில் நான் நடித்துக்கொண்டிருந்ததை ஏற்றுக் கொண்டவர்கள் மேடை நாடகம் என்று வந்தபோது எதிர்த்தார்கள். எந்த எதிர்ப்புக்கும் பயப்படாமல் நான் தொடர்ந்து நடிக்க எனது பெற்றோர் முழு ஆதரவு தந்தார்கள்.

‘பிச்சை வேண்டாம்’ நாடகத்தை யாழ்ப்பாணத்திலும் பேராதனையிலும் மேடையேற்றியபோது சந்திரப்பிரபாவும் மற்ற இரு பெண்களும் வரவில்லை. அவர்களுக்குப் பதிலாக வானொலி நடிகைகள் லலிதா – செல்வம் பெர்னான்டோ சகோதரிகள் நடித்தார்கள். இந்த நாடகம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் 07–08–1976 அன்று மேடையேறியது. இங்கும் மண்டபம் நிறைந்த காட்சி. இந்த மேடையேற்றத்தைத் தொடர்ந்து தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி நிதிக்காக பாடசாலையின் திறந்த வெளி அரங்கில் சுமார் 2000 பார்வையாளர்கள் முன்னிலையில் மீண்டும் மேடையேறியது.

யாழ்ப்பாணத்து மேடையேற்றங்களின் போது நான் இன்னும் சில சங்கடங்களை சந்திக்க நேர்ந்தது. பல இளைஞர்களோடு சேர்ந்து நடித்தது, நெருங்கி நடிக்கும் காட்சிகள், நான் நடித்த பாத்திரத்தின்

28 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

# அது அப்படித்தான் என்று துண்டிக்கப்படும் கேள்விகள்

## தோழுக்கு மேல் வளர்ந்தால் தோழமை தானே..?

மனித சமுதாயத்திலும் குழந்தை முதல் முதுமைப் பருவம் வரையான காலப்பகுதியில் மனிதன் தன் ஆற்றலுக்கேற்ப அனுபவம் பெற்று வாழ எத்தனிக்கின்றான். இப்பருவ நிலையில் பெற்றோர் மற்றும் பாதுகாவலரிடமிருந்து பாதுகாப்பு மற்றும் அனுபவங்கள் பெறும் இளமைப் பருவமானது மிக மிக முக்கிய திருப்பு முனை உடையது. பருவ வயது பத்திரம் என்பார்கள்.

பருவ வயதை அடையும் குழந்தைகளுக்கு எத்தனையோ சடங்குகள், சம்பிரதாயங்களை எம் சமூகத்தில் கடைப்பிடிக்கின்றனர். அதே சமயம் அந்நிலையிலுள்ள குழந்தைகள் உடலளவிலும், மனதளவிலும் பெற்றிருக்கின்ற மாற்றங்கள் குறித்தோ, இயற்கை அவர்களுக்கு வழங்கிய புதிய பரிணாமங்கள் குறித்தோ மதிப்பளிக்க தவறிவிடுகின்றனர் பல பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள். இயற்கையாகவே தோன்றும் உணர்வுப் பிளம்பு நிலை, மற்றும் பதற்றம், பல்வேறு கேள்விகள் போன்றனவற்றால் மனதளவில் சூழப்பட்டிருக்கின்ற போது பிள்ளைகள் பல குழப்பங்களுக்கு ஆளாகின்றனர். பெற்றோரின் அலட்சியப் போக்கு மற்றும் தம் பிள்ளைகள் என்றும் குழந்தைகள் என்ற பார்வை பிள்ளைகள் தமது பெற்றவர் மீதுள்ள நம்பிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை ஏமாற்றமடையச் செய்கின்றன.

ஒவ்வொரு உயிரினத்திற்கும் அதற்கென பருவ வளர்ச்சிகள், பரிணாமங்கள் உண்டு. எப்பேற்பட்ட சூழலில் எவ்வாறு வளர்க்கப்பட்டாலும் இயற்கை தகுந்த காலத்தில் தகுந்த இரசாயன மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும். அறிவியலோடு போட்டி போட்டு வாழ வேண்டிய இக்காலகட்டத்தில் நீண்ட காலக் கல்வி, மற்றும் தனக்கான சூழலைத் திட்டமிடுதல் போன்ற காரணங்களினால் நெடுங்காலம் பிள்ளைகள் பெற்றோருடன் வாழ நேர்வதால் தம் பிள்ளைகள் பருவமடைந்துவிட்டதை மறந்து குழந்தைகளாகவே பராமரித்து வருகின்றனர் பல பெற்றோர். இந்நிலையில் ஒரு சிறிய வட்டத்திற்குள் தம் பிள்ளைகளை வாழப் பழக்கப்படுத்தி தாம் கையாள்வதற்கு இலகுபடுத்தி அதனை கண்ணியம், நாகரிகம் என பல போர்வைகளால் அலங்கரிக்கின்றனர்.



பருவ வயதை அடைந்த பிள்ளைகள் எதிர்ப்பாலினர் பற்றிய அந்தரங்க விடயங்களையோ, தம் எண்ணங்களையோ பெற்றோருடன் பகிர்ந்து கொள்ள எத்தனிக்கும் முன்னரே சீ.. என்றும் காச்சு மூச்சு என்றும் கத்தித் தீர்ப்பவர்களையும், இவைபற்றி இனி பேசவே கூடாது என அப்படியே பேச்சை நிறுத்தி பயத்தோடு தம் பிள்ளைகளை கையாள்வதையும் காண்கின்றோம். தம்மிடம் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு தெளிவை தம் பிள்ளை பிறரிடம் கேட்டு விடாதா என்ற புரிதல் கூட இன்றி பலர் காணப்படுகின்றனர்.

தனக்கு தெரியாத விடயங்களை தம் பிள்ளைகளிடம் காட்டிக் கொள்வதையோ, ஒப்புக் கொள்வதையோ பெற்றோர் பலர் விரும்புவதில்லை. தன்னை குறைவாக காட்டி விடுமோ என்று கௌரவக் குறைவாக எண்ணுகின்றனர். தெரியாத விடயங்களை கேட்கும் போது அதை அப்படியே அடித்து முடக்குவது போன்று செயற்படுவார்கள் பலர். ‘உனக்கு எதுவும் தெரியாது’ எனக் கூறி தப்பித்துக் கொள்ளுவார்கள். ‘அது அப்படித்தான்’ அல்லது ‘எங்கள் காலத்தில் இப்படியெல்லாம்...’ எனக் கூறி தம் பிள்ளைகளின் கேள்விகளைக் கூட துண்டித்து விடுவார்கள். இன்னும் பல பெற்றோர் தாம் அடைய நினைத்து முடியாது போன தம் கனவுகளை தம் பிள்ளைகள் மீது திணித்து, அவர்களின் தனிப்பட்ட ஆற்றலுக்கு வழி விடாது முழு அடைப்பு செய்து அவர்கள் விரும்பாத பாதையில் பயணிக்கச் செய்கின்றனர். இதனால் மனச்சோர்வு ஏற்பட்டு எந்தப் பாதையிலும் திடமாக பயணிக்க முடியாது தவிக்கின்றனர் பிள்ளைகள்.

தமக்குத் தெரியாத கற்பனைகளைச் சொல்லித் தப்பித்துக் கொள்வதை விட தெரிந்த விடயங்களைச் சொல்லிக் கொடுத்து தெரியாத விடயங்களை தேடித் தெரிந்து கொள்ளச் சொல்லி ஊக்கமளிப்பதே சிறந்தது. அவற்றில் உள்ள சிக்கல்கள், கரடுமுரடுகளை விழிப்புணர்வாக சொல்லிக் கொடுப்பதில் தவறில்லை. ஒரு உயிர் பூமிக்கு வருகிறது என்றால் அவ்வுயிர் ஒரு தாய் தந்தையினுடைய இணைப்பின் ஊடாக வருகிறதே தவிர ஒரு போதும் அந்த தாய் தந்தைக்கோ, உறவுகளுக்கோ முழு உடமையானதோ அல்லது அடிமையானதோ அல்ல. தன் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக இப்பூமியில் உள்ள

● கரிணி



பல்வேறுபட்ட உயிருள்ள, உயிரற்ற பொருட்களை பயன்படுத்தி இப்பூமியில் மகிழ்வாக வாழ்வதற்கே வருகிறது. ஆனால் அந்த பொருட்களினாலோ, சம்மந்தபட்ட அல்லது பிற நபர்களினாலோ அதன் சுதந்திரம் பறிக்கப்படும் போது அதன் தனித்தன்மை மழுங்கடிக்கப்பட்டு துவண்டு போகிறது.

எப்பொழுதும் தம் உருவாக்கத்திற்கு பிறர் பாராட்டு கிடைக்க வேண்டும் என ஏங்குவதே மனித மனதின் இயல்பு. அதனாலேயே தமது குழந்தையும் முற்றுமுழுதாக தம் உருவாக்கம் என்ற தவறான புரிதலோடு தம் பிள்ளைகளை தாம் சொல்வதை எல்லாம் கேட்டு நடக்கக் கூடிய பதிவேற்றம் செய்யப்பட்ட ஒரு இயந்திரத்தனமான சொத்துக்களாக தமது கரங்களுக்குள் என்றென்றும் வைத்துக் கொள்ள பல பெற்றோர்கள் விரும்புகிறார்கள். அதற்கான சகல முன்னேற்பாடுகளையும் செய்து அவர்கள் வெளியேறாதபடி பெரிய அரணாக கட்டி எழுப்புகிறார்கள்.

இது தன் மரபணுக்களின் சிறப்பை இப்பூமியில் பரவ செய்யப்போகும் ஆற்றல் மிக்க பிறப்புக்கள் மீது செலுத்தப்படும் வன்முறை நிறைந்த அத்துமீறலாகும்.

27 ஆம் பக்கம் பார்க்க...






# எங்கிருந்து வருகுவதோ பாடல்!

ராத்திரியின் நிசப்தத்துள் எழும் சப்தங்களை செவிகளால் அல்ல உணர்வினால் கேட்டு அக முக மலர்வடைதல் என்பது எனக்கு ஒன்றும் புதிதல்ல. இன்றும் அப்படித் தான் ராத்திரிக்கு ரகசிய முத்தமிட்டு மகிழ்ந்திருக்கும் வேளை எழுந்த ஓசை இசையாகி என் செவிகளை நிரப்பிக் கொண்டிருந்தது.



எங்கிருந்துவருகுவதோஇந்தஓசை? என்று அதிசயித்தேன் பாரதி என்னை ஆட்கொண்டான்.

இப்படித்தான் பாரதிக்கும் ஓர் நாள் நிகழ்ந்திருக்குமோ?

இப்பிரபஞ்ச இசையில் தன்னைத் தொலைத்திருப்பாரோ ? என்று எண்ணத் தோன்றியது.

பாரதியை கவிஞனாய் காண்பதா? கலைஞனாய் காண்பதா ?

எங்கு நோக்கினும் கண்ணனின் அம்சமாய், எப்பொருளும் அவன் லீலையின் உச்சமாய், ஆக்கமும், ஊக்கமும், ஏக்கமும், தாக்கமும், நோக்கமும், நீக்கமும் கண்ணனே கண்ணனே என்று கருத்தினில் இருத்தி காதலால் கசிந்த கற்பக உணர்வுகளில் தோய்ந்த பாரதியின் செவிகளில் மெல்ல நுழைகிறது ஓர் இசை.

அந்த இசை எங்கிருந்து வருகிறது ? யார் இதனை இசைகிறார்? என்று பாரதிக்குள் வினா எழும்புகிறது. அதற்குப் பல விடைகளைத் தந்து பார்க்கிறார்.

1. மலை குன்றினின்று வருகிறதா?
2. மர கொம்பினின்று வருகிறதா ?
3. அகண்ட ஆகாய வெளியிலிருந்து வருகிறதா ?
4. அலை ஒலித்திடும் தெய்வீகமான யமுனை ஆற்றில் இருந்து ஒலிகிறதா?
5. இலைகள் சலசலத்திடும் பூஞ்சோலையிலிருந்து எழுகிறதா?
6. காட்டில் இருந்து வருகிறதா ?
7. நிலவின் ஒளிக்கற்றை தான் கொண்டுவந்து தருகிறதா ?
8. அயல் நாட்டில் இருந்து இந்த தென்றல் நாதத்தை கொண்டு வருகிறதா?
9. ஏதேனும் பறவை இருக்கிறதா இவ்வாறு அமுதக்கனல் போல பாட ?
10. இசையில் உயர் கின்னரர் வாத்தியத்தில் இருந்து வருகிறதா ?

இவ்வாறு பத்து விடயங்களை இப்பாடலின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

ஒரு கணம் சிந்தித்தால் புரியும் , இயற்கையின் இசையை எவ்வளவு ஆழமாக உள்வாங்கி இருக்கிறார் பாரதி என்று. இப்பிரபஞ்சத்தின் ஓசை இசையாகிப் பரந்து கிடக்கிறது. அந்த மந்திர இசைகளின் சக்தியை உணர்ந்தால் ஆத்ம பலம் நிறையும். இதுவே இந்தப் பட்டியலின் ரகசியம்.

இந்த இயற்கை ஓசையின் சந்தமே மந்திரச் சொற்களாக பாரதி கவிதைகளில் தாளமிட்டுக்கொண்டு இருக்கின்றன.

எங்கிருந்தோ வந்த இந்த இசையினால் பாரதிக்கு என்ன நேர்கிறது என்று குறிப்பிடுகிறார்.

இனிய அமுதை போல இருக்கும் இந்த இசை, அறிவு மயக்கத்தை தருகிறதே, இந்த நாதம் என் உயிரை உருக்குகிறதே எங்கு இருந்து தான் வருகிறது என்று இசைக்கு அடிமையாகிறார். ஈற்றில் கண்டு கொள்கிறார்... ஆ ! இந்த தெய்வீக இசை வேறெங்கிருந்தும் வரவில்லை, கண்ணன் ஊதிடும் வேய்ங்குழல் தான் என்று உணர்ந்து அனுபவிக்கிறார்.

அந்த உயிர் நாதத்தின் உன்னதத்தை எப்படி உள்வாங்கி கொள்கிறார் என்று பாருங்கள். இது இசையே இல்லை ,காதிலே அமுதாகவும் உள்ளத்திலே நஞ்சுமாக பெண்கள் கஷ்டப்படுவதற்கென்றே வீசுகின்ற அம்பு தான் கண்ணனின் குழலிசை என்று தவிக்கிறார்.

இசையின் மீது பாரதிக்கு இருந்த அதி மோகத்தை அவரது பல கவிகளினூடு கண்டிருக்கிறோம். வேய்ங்குழல் என்ற பாடலும் அதற்க்கு சான்று பகர்கிறது.

பாரதியின் புனிதமான எழுத்துக்களை ஒவ்வொரு முறை படிக்கும் போதும் வெவ்வேறு பொருள் கொள்ள



மனம் விரும்பும். கணம் தோறும் புதிதாய் பிறந்து என்று வாழ்ந்தவன் கவிகளும் தினம் தோறும் புதிதாய்த் தான் தெரிகின்றன. ஐயோ ! பாரதி நீ எங்கு இருக்கிறாய் ? நீ கலைஞனா? கவிஞனா? எனத் தத்தளித்து வியந்தேன். என் உள்ளத்தே உள்நின்று புன்னகைக்கிறான் அடையாளங்களுக்கு அப்பாற் பட்டவனாய். மீண்டும் அவனிடத்தே சரணடைவதை விட வேறு வழியுளதோ ? .



*எங்கிருந்து வருகுவதோ ? - ஒலி*
*யாவர் செய்கு வதோ ? - அடி தோழி !*
*குன்றினின்றும் வருகுவதோ ? - மரக்*
*கொம்பினின்றும் வருகுவதோ ? - வெளி*
*மன்றினின்றும் வருகுவதோ ? - என்றன்*
*மதி மருண்டிடச் செய்குதடி ! - இஃது*
**(எங்கிருந்து)**

*அலை ஒலித்திடும் தெய்வ - யமுனை*
*ஆற்றினின்றும் ஒலிப்பதுவோ ? -*
*அன்றி*
*இலை ஒலிக்கும் பொழில் இடை நின்றும்*
*எழுவதோ இஃது இன்னமுதைப்போல்*
**(எங்கிருந்து)**

*காட்டினின்றும் வருகுவதோ ? - நிலாக்*
*கற்றை கொண்டு தருகுவதோ ? - வெளி*
*நாட்டினின்றும் இத்தென்றல்*
*கொணர்வதோ ?*
*நாதம் இஃது என் உயிரை உருக்குதே !*
**(எங்கிருந்து)**

*பறவைஏதும் ஒன்றுள்ளதுவோ ? -*
*இங்ஙன்*
*பாடுமோ அமுதக் கனல் பாட்டு*
*மறைவில் நின்றிடும் கின்னரர் ஆதியர்*
*வாத்தியத்தின் இசைஇதுவோ அடி !*
**(எங்கிருந்து)**

*கண்ணன் ஊதிடும் வேய்ங்குழல்தானடீ !*
*காதிலே அமுது உள்ளத்தில் நஞ்சு*
*பண்ணன் றாமடி பாவையர் வாடப்*
*பாடி எய்திடும் அம்படி தோழி*
**(எங்கிருந்து)**




அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்


Sari 1
Sari 1
தரமான
ஆடைகள்
நியாயமான
விலையில்
பெற்றுக்
கொள்ளலாம்
தித்திக்கும்
தீபத் திருநாள்
வாழ்த்துக்கள்
எம்மிடம் தங்க நகைகளும்
பெற்றுக்கொள்ளலாம்
Taunusstr.49, 60329 Frankfurt am Main
0152 1923 9663
Opening Hours: Mon- Sat 10.00 am- 20.00 pm
https://www.facebook.com/sari1fashionhouse


Frankfurt நகரில்...
New
ASIA LAND
இனிய
தீபத் திருநாள்
வாழ்த்துக்கள்
Frankfurt (Main)
Hauptbahnhof
முன்பாக 50 மீற்றர்
தொலைவில்
அமைந்துள்ளது
மளிகைப்பொருட்கள் மற்றும்
மரக்கறி, கடலுணவுப்பொருட்கள்
அனைத்தும் என்றும் சிறந்த
விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
TAUNUSSTRASSE 49
60329 FRANKFURT
Tel: 069 23 35 35 | Fax: 069 24009760

வ.சிவராஜா
( யேர்மனி )



# யேர்மனியில் கோரோனாவையும் ஓரங்கட்டும் வேறு சில நோய்களும், மக்களின் போக்குகளும்!

இன்றைய வாழ்வியல் சூழல் மாறுபட்டுவிட்டது. எதிலும் அவசரம், பணம் சம்பாதிக்கும் முழுநோக்கம், கணனி உலகமாகியதால் அனைத்துக் கட்டுப்பாடுகளையும் இழந்து வருகின்றோம். இதனால் கட்டுக் கடங்காதஅவசரஉணவுகள்,சீனிச் சத்து நிறைந்த குடிபானங்கள், தண்ணீர் குடிப்பதைக் குறைத்தல்,கொழுப்பு, புரத உணவுகளை அதிகமாகப் பாவித்தல் உடற்பயிற்சி, நடைப்பயிற்றி, கடும் உழைப்பு இல்லாமை போன்ற காரணங்களால் உலக நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்தே வருகின்றன.

குறிப்பாக இதயநோய்கள், நீரழிவு, இரத்த அழுத்தம், மனஅழுத்தம் போன்ற வியாதிகள் இன்று உலகம் முழுவதும் அதிகரித்து வருவதை நாம் அறியும் வேளையில்.. இவற்றிலிருந்து விடுபட பல சுகாதார வழிமுறைகளைக் கையாள வேண்டும். தவறும் பட்சத்தில் பல நோய்களையும் அனுபவித்து விரைவாகவே இறப்பைத் தழுவிவிடுவோம் என்பதைப் புரிந்துகொள்வோம். யேர்மனியில் நாம் காணும் சில விடையங்கள் இதில் குறிப்பிடப் படுகின்றது. இவற்றையும் அறிந்துகொள்ளுங்கள்

1-யேர்மனியில் 14 வயதுக்கு உட்பட்டவர்களில் 1.06 சிறுவர்கள் தினமும் நாரிப்பிடிப்புக்கான மருந்துகளைப் பாவிக்கிறார்கள் என சுகாதாரப்பகுதி புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

2-யேர்மனியிலுள்ள மக்கள் தொகையில் 43 வீதம் பேர் பொதுவானநோவு, முதுகுவலி போன்ற நோய்களுக்கு மருந்து பாவிக்கிறார்கள்.

3-யேர்மனியில் பல வகையான தொற்றுநோய்களுக்கு தடுப்பூசி போடுவது சரி என்று 41 வீதமான மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

4-யேர்மனியில் பல வகையான கிருமி தொற்று நோய்களுக்குத் தடுப்பூசிகள் பாவிப்பதால் புற்று நோய் வரலாம் எனப் பலர் அச்சம் கொள்கிறார்கள். ஆனால் 70 வீதமான மக்கள் தடுப்பூசிகள் முக்கியமில்லை என்றும் கருதுகிறார்கள்.

5-யேர்மனியில் சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள நோயாளிகளில் சுமார் 80.000 பேர் நாளாந்தம் சிறுநீரகம் சுத்திகரிக்கும் மெசினைப் பாவிக்கிறார்கள் என சுகாதாரப் பகுதி அறிவித்துள்ளது.

6-யேர்மனியில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களில் 25 வீதம்பெருக்குத் தோள்பட்டை வருத்தம் இருந்து வருகின்றதாம். இதனால் வருடாவருடம் சுமார் 25.000 பெருக்குத் தோள்பட்டைகளில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டு கம்பிகள் பொருத்தப்படுவதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

7-கொரோனா கோவிட் -19 தொற்றுக்குப் பின்பு தடுப்பூசிகள் போடுவதில் யேர்மனியிலுள்ள மக்களில் 27 வீதம்பேர் தேவையில்லை என்றும் 57 வீதம்பேர் தேவை என்றும் கருத்துக் கணிப்பு கூறியுள்ளது.

8-யேர்மனியில் அதிகமான மக்கள் இனிப்பு, பால், பாலுற்பத்திப் பொருட்களை உண்பதில் ஆர்வமுடையவர்கள். ஆனால் 15 வீதமான மக்களுக்கு இந்தப் உணவுவகைகள் ஒத்து வராததால் இவ் உணவுகளையும் பாலையும் குடிப்பதில்லையாம்.

9-மனிதருக்கு உணவு, தண்ணீர், உழைப்பு, ஓய்வு எவ்வளவு அவசியமோ அதே அளவு தூக்கமும் அவசியமானதாகும். இது குறைந்தாலும் கூடுவதாலும் பலருக்குப் பல நோய்களும் வந்து சேருகின்றன. யேர்மனியிலுள்ள மாகாணங்களில் முதல் 10 இடங்களைப் பிடிக்கும் மக்களில் குறைந்த தூக்கத்தை மேற்கொள்வோரைப் பார்ப்போம்.

| | |
|---|---|
| Saarland | -30% |
| Bayern | -26%, |
| Rheinland Pfalz | -25%, |
| Nordrhein Westfalen | -24%, |
| Berlin | -23%, |
| Bremen | -22%, |
| Brabdenburg | -21%, |
| BadenWürtenberg | -20% |

10-யேர்மனியில் ஏற்பட்ட கொரோனா தொற்று நோய்க்கு இறைச்சித்தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களாலும் ஏற்பட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இது இப்படி இருக்க யேர்மனியில் மிகக்கூடுதலான இறைச்சி வகைகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களையும் இதனால் ஏற்பட்ட கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கைகளையும் அட்டவணையில் பார்ப்போம்..

| நிறுவனங்களின் பெயர் | அமைந்துள்ள இடம் | எற்பத்தி ஏற்றுமதி | கொரோனா தொற்றாளர்கள் |
|---|---|---|---|
| 1-Tönnies | Rheda-Wiederbrückck | 30.3% | 1.550 பேர் |
| 2-Westfleisch | Münster | 14.0% | 371 பேர் |
| 3-Vion | Hilden | 13.8% | 160 பேர் |
| 4-Danish Crown | Essen/Oldenburg | 06.0% | 00 பேர் |
| 5-Müller-Gruppe | Birkenfeld | 03.8% | 420 பேர் |

11-யேர்மனியிலுள்ள அதிகமான மக்கள் கோப்பி குடிக்கும் பழக்கமுடையவர்கள். யேர்மனியர் ஒருவர் ஒரு வருடத்தில் சராசரியாக 164 லீட்டர் கோப்பி குடிக்கிறார்கள் என அரச வர்த்தக புள்ளிவிபரம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.



# ஒரு கோவிட் பயணம்; எனது சொந்த அனுபவம்

# மரண இருளின் பள்ளத்தாக்கு ஒளி தந்த இருளின் காலம்




## நடுப்பக்கம்

நிகழ்வுகளெல்லாம் இறைவனால் நமக்குத் தரப்படுகின்ற அனுபவப் பாடங்கள். சில அனுபவப் பாடங்கள் நம்மை விரக்தியில் எறியும். சில நம்மை குழப்பத்தில் உருட்டும். சில அனுபவங்கள் நம்மை புரியாமைக்குள் நடத்திச் செல்லும். ஆனால் ஒன்று மட்டும் யதார்த்தம், இறைவனின் கரம்பிடித்து நடப்பவர்களுக்கு எந்த ஒரு துயரத்தின் பயணமும், கடைசியில் வெற்றியின் பாடலாய் முடிவடையும். அது இவ்வுலகின் ஆயுளானாலும் சரி, விண்ணுலகின் இறைவனின் அருகாமையானாலும் சரி.



இறைமகனின் பார்வை பட்ட கதவுகளுக்குள் கிருமிகளின் காலடி நுழைவதில்லை எனும் நம்பிக்கைகள் பல வேளைகளில் உடைந்து போகின்றன. இறைவனே அதை அனுமதிக்கிறார். அதீத கவனத்தோடு இருந்த போதும் கோவிட் ரகசியமாய் வந்துக் கதவைத் தட்டியது. ஒரு சின்னக் கிருமிக்குப் பயந்து சோதனை செய்யாமலேயே வாரங்கள் கழிந்தன. அச்சம் வந்து தைரியத்தின் அத்தனை சன்னல்களையும் சாத்தியபின், கடைசியில் அந்த நாள் வந்தது. நோயின் தாக்கம் அதிகரிக்க, கோவிட் பாசிடிவ் எனும் முடிவு வர, சி.டி ஸ்கேன் ஏகமாய் மூச்சுத் திணறி கதறியது.

‘உடனடியாக அட்மிட் பண்ணுங்க, கொஞ்சம் கிரிட்டிக்கல்’ என்றார் கல்யாணி மருத்துவமனை டாக்டர்.

‘கிரிட்டிக்கலா?’ என்றேன் ? வெளிக்காட்டாத அதிர்ச்சியுடன்

ஆமா... 90ம்சதவீதம் நுரையீரல் பாதிப்பில் விழுந்திருக்கிறது. எப்படி இன்னும் உங்களுக்கு மூச்சுப் பிரச்சினை வரவில்லை



என்பது தெரியவில்லை. பரவாயில்லை, ரிக்கவர் ஆயிடலாம்ன்னு நினைக்கிறேன். கடவுளே நினையுங்கள், அட்மிட் ஆயிடுங்கள் உங்களுக்கு வயசு கைகொடுக்கும்ன்னு நினைக்கிறேன் என்றார் அவர். வானவர் கைகொடுத்தால் தான் வாழ்க்கை, வயது கைகொடுக்கப் போவதில்லை எனும் குரல் மனதுக்குள் அப்போதே ஒலித்தது.

‘‘ஓக்கே.. என்பதைத் தவிர எங்களிடம் வேறு பதில் இருக்கவில்லை’’. தனிமையாக அந்த மருத்துவ மனைக்குள் நுழைந்த எங்களுக்கு அடுத்தடுத்த அரை மணி நேரத்தில் கிடைத்த அழைப்புகளும், உதவிகளும், செபங்களும், விசாரிப்புகளும் நிலைகுலைய வைத்தன. ‘‘நமக்கு யாருமே இல்லேன்னு நினைச்சேன்... எத்தனை பேரு உதவிக்கு வராங்க ! எனும் மனைவியின் பொலபொலத்த கண்ணீரின் ஈரத்தில் ஐ.சி.யூவுக்குள் நுழைந்தேன்’’.

ஐ.சி,யூ என்பது தன்னம்பிக்கையின் கடைசி வேர்களைக் கூட கழற்றிக் கீழே போடும் இடம். ஒரு அழுக்கடைந்த கந்தையை படுக்கையில் புரட்டிப் போடும் தருணம் அது. உடலானது சுக்குநூறாக உடைக்கப்பட்ட பயனற்றுக் கிடக்கும் பாண்டத்தைப் போல மாறுவது. ‘‘குயவனின் மட்கலம் சுக்குநூறாய் உடைந்து போவதுபோல் இருக்கும்; அடுப்பிலிருந்து நெருப்பு எடுப்பதற்கோ பள்ளத்திலிருந்து நீர் மொள்வதற்கோ உடைந்த துண்டுகளில் எதுவுமே உதவாது’’. [ஏசாயா 30:14]. அங்கே அடைபடுவதும், செங்கடலுக்குள் கால் வைப்பதும் ஒரே விஷயம் தான். நம்பிக்கையும், விசுவாசமும் மட்டுமே கரை சேர்க்கும்.

கூர்மையான ஊசிகளின் தொடர் குத்தல்களும், உடலெங்கும் இணைக்கப்பட்ட செயற்கை வயர்களும், கண்களுக்கு மேலே கண நேரமும் பீப் அடித்துக் கொண்டிருக்கு டிஜிடல் மானிடர்களும் எதுவுமே நமக்குச் சம்பந்தம் இல்லாதவை. பக்கத்து ரூமில் ஒருத்தரு போயிட்டாரு, ஐசியூல நேத்தைக்கு ரெண்டு



காலி போன்ற செய்திகள் வராண்டாக்களின் படபடப்பை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருந்தன.

போதாக்குறைக்கு வாழ்க்கையிலேயே மிக எளிதான ஒரு வேலையான ‘‘மூச்சு விடுதல்’’ , மிகப்பெரிய பணியாக மாறிப் போன அவஸ்தையை அங்கே தான் கண்டு கொள்ள முடிந்தது. தரையில்

17 ஆம் பக்கம் பார்க்க...



அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

கால் வைத்தாலே அரைமணி நேரம் மூச்சுத் திணறும் அவஸ்தையில் கடவுள் மூச்சை மட்டுமல்ல, நுரையீரலையும் நிலைப்படுத்தினார். நள்ளிரவு தாண்டிய மௌனத்தின் பொழுதுகளில் கருவிகள் இடுகின்ற புரியாத குழப்பச் சத்தங்களையும் இறைவனே ஸ்திரப்படுத்தினார்.

அந்த நேரத்தில் மனதுக்குள் நிழலாடிய, கூடாரமடித்துக் குடியிருந்த ஒரே ஒரு வசனம் ‘‘ஆண்டவரே உங்களுக்காகப் போரிடுவார் நீங்கள் அமைதியாயிருங்கள் [ விடுதலைப்பயணம் 14:14 ] கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார் நீங்கள் சும்மாயிருப்பீர்கள் எனும் வசனம்.

சில வசனங்களைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் அதற்குரிய படுக்கையில் கிடக்க வேண்டும். இறைவனின் பேரன்பின் ஆழத்தை அறிந்து கொள்ள வேண்டுமெனில் நமது பலங்களின் மீதான கடைசி கட்ட ஈர நம்பிக்கையையும் கூட இறக்கி வைக்க வேண்டும். இவையெல்லாம் அந்த ஐ.சியூவின் மயான நள்ளிரவுத் தாண்டிய பொழுதுகள் உணர்த்திய கதைகள்.

சும்மா இருந்து செயிப்பது என்பது என்ன என்பதை அந்த காலம் புரிய வைத்தது. சும்மா இருப்பது என்பது விசுவாசத்தை அதிகரித்துக் கொள்வது. இறைவன் நிச்சயம் நமக்காய் போரிடுவார் எனும் நம்பிக்கையை ஆழப்படுத்துவது. நமது இதயத்தின் இயங்கு தசைகளெங்கும் இறைவனோடு உரையாடல் நடத்துவது. ‘‘நீ உன் விசுவாசத்தை ஆழப்படுத்து, நான் உன் பாதைகளை வலுப்படுத்துகிறேன்’’ என்றார் இறைவன். ஆழப்படுத்த முயன்றேன்.

எவ்வளவு பெரிய மனிதர்கள் தங்களுடைய முழு நேர ஊழியப் பணியைக் கூட ஒதுக்கி வைத்து விட்டு செபத்திலும், டாக்டர்களிடம் உரையாடுவதிலும் தங்களுடைய பொன்னான நேரத்தைத் தந்தார்கள் என்பதெல்லாம் கண்ணீரால் எழுதி முடிக்க முடியாத இன்னொரு கதை. மதங்களைக் கடந்த மனிதநேசத்தின் உச்சத்தை இத்தகைய தருணங்கள் சொல்லித் தருவதும் இறைவனின் பேரன்பின் பாடமே.

கடவுள் கரம்பிடித்து நடத்தினார். ஒரு வாரத்துக்குப் பிறகு ஐசியூ வின்




கதவுகள் திறந்து கொண்டன. தனி வார்டுக்கு இடம் பெயர்ந்தேன். அசௌகரியங்கள் குறைந்திருந்தன, இறைவனின் மீதான அன்பு அதிகரித்துக் கொண்டே இருந்தது. இந்த கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் இந்தக் கணத்தில் பேராபத்தின் பெருநதியிலிருந்து இறைவன் என்னை வெளியே கொண்டுவந்திருக்கிறார். மரண இருளின் பள்ளத்தாக்கில் அவரது வெளிச்சத்தின் பாதைகளில் தொடர்ந்து என்னை நடத்திக் கொண்டிருக்கிறார். இன்னும் ஒரு சில தினங்களில் வீடு வந்து சேரும் சூழலை இறைவன் உருவாக்கியிருக்கிறார்.

ஐ.சி.யூவுக்குள் நிராயுதபாணியாய் நுழைந்தபோது மனதுக்குள் எழுந்த ஒரு மிகப்பெரிய கேள்வி, ‘‘இன்று இரவே உன் வாழ்க்கை முடிந்து போனால் நீ வீணாய் செலவழித்த காலங்களுக்கு என்ன பதில் சொல்வாய் ?’’ எனும் கேள்வி. அந்த கேள்வி என்னைத் தூங்கவிடவில்லை.

கோவிட்டின் காலம் முடியும். செங்கடலைக் கடக்கும் காலம் நிகழும். எனில் இந்த பயண காலம் வெறும் வேடிக்கையின் காலமாய் தொடரக் கூடாது எனும் சிந்தனை மனதில் எழுகிறது. போராட்டம் என்பது நமது வலுவினால் நடப்பதல்ல, வலுவின்மையால் நடப்பது எனும் புரிதல் தெளிவாகிறது.

நமது வாழ்வின் அர்த்தமானது பிறருக்காக வாழ்வதில், பிறருடைய தேவைகளுக்காக வாழ்வதில், பிறருக்கு மீட்பின் நற்செய்தியை அறிவிப்பதற்காக வாழ்வதில், தன்னைப் புறந்தள்ளி இறைவனை அரவணைக்கும் வாழ்க்கை வாழ்வதில் அர்த்தப்படுகிறது.



**இந்த கோவிட் காலம் ஒரு சில புரிதல்களைத் தந்திருக்கிறது.**

1. அச்சம் தவிர் ! கோவிட் வந்திருக்குமோ எனும் பயத்தாலும், நம்மை ஒதுக்கி விடுவார்களோ எனும் அச்சத்தாலும், சிகிச்சை நேர்மையாய் நடக்குமா எனும் சந்தேகத்தாலும் பலர் இந்த சோதனைக்குச் செல்வதில்லை. ஆனால், தொடக்கத்திலேயே இந்த நோயைக் கண்டறிந்தால் ஒரு சின்ன காய்ச்சலை விரட்டுவதைப் போல இதை விரட்ட முடியும்.

2. துணிச்சல் கொள் ! நமது நுரையீரலில் எழுகின்ற பாதிப்பு தான் முக்கியமானது. உடலில் உயிர்வழியின் அளவு 93 எனும் அளவீட்டுக்கு குறைவாய் இருந்தால் சுதாரித்துக் கொள்ள வேண்டும். காரணம், உடலுக்குத் தேவையான உயிர்வழி கிடைக்கவில்லை என்பது அதன் அடையாளம். அப்படிப்பட்ட சூழலில் உடல் இயல்பாய் செயல்பட முடியாமல் போய்விடும். இந்த சூழலில் சரியான மருத்துவ உதவி அவசியம்.


3. எதிர் கொள் ! நோய் காலத்திலும், அதற்குப் பின்பும் மருத்துவர் சொல்லும் ஆலோசனைகளைக் கடைபிடிப்போம். கோவிட்டுக்கு மருத்துவ உலகம் தரும் ஆலோசனைகளை விட பல இலட்சம் மடங்கு அதிகமாய் வாட்சப் வாத்தியார்கள் தருகிறார்கள், அவற்றை கொஞ்சம் கவனமாய் கையாள்வது நல்லது.

4. தன்னம்பிக்கை கொள் ! கோவிட் என்பது சர்வ தேச அச்சுறுத்தல். ஆனால் உண்மையில் இதை விடக் கொடிய நோய்கள் நம்மைச் சுற்றி உலவுகின்றன, ‘‘அதிகம் பேருக்கு வருகிறது’. என்பது தான் இந்த நோயின் சிக்கலே தவிர, இதன் தீவிரம் பல வேளைகளில் கடினமாய் இருப்பதில்லை. எனவே தன்னம்பிக்கை கொள்வோம்.

5. மனித நேயம் கொள் ! கோவிட் நோயாளிகளை பழங்கால தொழு நோயாளிகளைப் போல பாவிப்பதை நிறுத்திக் கொள்வோம். சரியான பாதுகாப்பு அம்சங்களுடன் அவர்களை எதிர்கொள்வோம். இந்த நோய் தாக்கி உதவிகள் தேவைப்படும் இலட்சக்கணக்கான மக்கள் உலகெங்கும் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவ இதயத்தை உருவாக்குவோம்.



அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



# இணையவழிக் கல்வியும் இரையாகும் ஆசிரியர்களும்!

## தமிழகம் ஒரு பார்வை

பொலிகையூர் ரேகா
M.com.,M.phil.,MBA.,M.phil.,

கொரோனா என்னும் கொடிய தீநுண்மியானது உலக மக்களின் செயல்பாட்டினை முடக்கிப்போட்டுள்ளது. அனைத்து மக்களும் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள நிலையில் ஆசிரியர்களின் நிலமையும் எதிர்பார்த்திராத அளவில் மாற்றம் கண்டுள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இன்னும் பள்ளி, கல்லூரிகள் திறக்கப்படாத நிலையில் இணையத்தினூடாகக் கல்வி நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. இணையவழிக் கல்வியில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைப் பற்றி விவாதிக்கும் ஊடகங்கள் ஆசிரியர்களின் சிக்கல்கள் குறித்துப் பெரிதும் பேசவில்லை என்றே சொல்ல வேண்டும்.

அரசியல் மாற்றங்களுக்கேற்ப, புதிய திட்டங்களுக்கேற்ப சில ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும் தம் கற்பித்தலில் மாற்றங்களை எதிர்நோக்கும் ஆசிரியர் சமூகம் இன்றும் இந்த நோய்த்தொற்றால் பாரியதொரு மாற்றத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த மாற்றங்களையும், கல்வி நிறுவனங்களின் அழுத்தங்களையும் தாங்க முடியாமல் வெளியேறிய ஆசிரியர்களும் வெளியேற்றப்பட்ட ஆசிரியர்களும் ஏராளம்.

புலவுச்சோறு விற்பனை, பழக்கடை, காய்கறிக் கடை, திண்பண்ட விற்பனையாளர்கள் , கூலியாட்கள் எனப் பல ஆசிரியர்களும் இன்னொரு வடிவம் எடுத்திருப்பது காலக்கொடுமை. எந்த வேலையும் இழிவற்றது தான் ஆனால் கல்விமான்களாய் வலம் வந்தவர்கள் திடீரென்று இப்படியொரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்வதென்பது அத்தனை சுலபமானதல்ல. எத்தனையோ மாணவர்களை பெரியவர்களாக மாற்றிவிட்ட அவர்கள் நிலமை இப்படி மாறியது வேதனைக்குரியது.

ஆட்குறைப்பு, மாணவர் சேர்க்கைக்காக உதவாமை, மாணவர்கள் கட்டணம் கொடுக்காமை ஆகிய காரணங்களுக்காக வேலையை விட்டு நீக்கப்பட்ட ஆசிரியர்கள் ஒரு புறம் என்றால் ஊதியக் குறைப்பு, ஊதியமின்மை என்ற நிலையில் வேலை பார்க்கும் ஆசிரியர்களின் நிலமை இன்னும் கொடுமையானதாகவுள்ளது.

ஊதியம் குறித்துக் கேட்டால் இருக்கும் வேலையும் பறி போய்விடும் என்பதால் பலர் அமைதியாகவே இணைய வகுப்புகளை எடுத்துக்கொண்டிருக்கின்றனர். சில கல்வி நிறுவனங்கள் மட்டுமே ஊதியத்தை முழுமையாக வழங்குகின்றன. வீட்டிலிருந்துதானே வேலை பார்க்கின்றீர்களெனப் பல கல்வி நிறுவனங்கள் ஊதியத்தைக் குறைத்தே கொடுக்கின்றனர்.

இது ஒரு பக்கம் என்றால் வீட்டில் இருந்து வேலை பார்க்கும் இச்சூழலில் நேர வரைமுறையின்றி வேலை பார்க்கப் பணிக்கப்படுவது அதைவிடக் கொடுமையானதாக மாறியுள்ளது. குறித்த நேரத்தில் மாணவர்களுக்கான வகுப்பு எடுப்பது போக, நேரம் காலமின்றிக் கொடுக்கப்படும் கல்வி தொடர்பான வேலைகளையும் உடனுக்குடன் செய்தாக வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இணையவழிக் கல்விக்குப் பலரும் எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலையில் அந்த விமர்சனங்களையும் தாங்கிக்கொண்டு பாடம் நடத்தியாக வேண்டிய கட்டாயத்தில் ஆசிரியர்கள் உள்ளனர். வீட்டிலிருந்து கற்பிப்பதென்பது அத்தனை சுலபமானதல்ல. ஒரு நாள் வகுப்புக்காகக் குறைந்தது மூன்று மணி நேரமாவது செலவு செய்து PowerPoint , காணொளி ஆகியன தயாரிக்க வேண்டும். இணைய வழிக் கல்வியில் பெற்றவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற இதுபோன்று செயலூக்கம் உள்ள வழிகளில் வகுப்புகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் ஆசிரியர்கள் உள்ளனர்.

இணைய வசதியற்ற அல்லது சரியாக வராத இடங்களில் இருக்கும் ஆசிரயர்களும்கூட வகுப்பெடுக்க இணைய வசதியுள்ள இடங்களை நாட வேண்டியுள்ளது.

வகுப்பெடுக்கும்போது இடையூறுகள் வராத வண்ணம் அவர்கள் சூழலையும் பார்த்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

பாடத்தில் மட்டுமன்றிக் கல்வி நடவடிக்கைகள், இணையத்தைப் பயன்படுத்துவது, பயன்பாட்டுச் சிக்கல் என எந்த நேரத்தில் மாணவர்கள் அழைத்தாலும் பதிலளிக்க வேண்டிய கட்டாயம் இப்போது அனைத்து ஆசிரியர்களுக்கும் உள்ளது. சொந்த உபயோகித்திற்கென வாங்கிய எதுவுமே இப்போது அவர்களற்றதாகியுள்ளது. அலைபேசி, கணனி ஆகியன கல்லூரி அழைப்புகளுக்காவும், இணைய வகுப்பெடுக்கவும் என மாறியுள்ளது.

வீட்டிலிருந்து வேலை செய்வதற்காக கணனிகளை வழங்கும் தொழில் நிறுவனங்கள் போன்று எந்தக் கல்வி நிறுவனங்களும் ஆசிரியர்களுக்காக இணைய வகுப்பெடுக்க எதையும் வழங்கவில்லை. பெரும்பாலும் அவர்கள் சொந்த அலைபேசியையோ, கணனியையோ தொடர்ந்து உபயோகிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இணையக் கட்டணமும் அவர்கள் சொந்த செலவிலேயே அடங்கிப் போகின்றது.

இணைய வகுப்பிற்காகவே அலைபேசியும்,கணனியும் கடனடிப்படையில் வாங்கிய ஆசிரியர்கள் ஏராளம். அலைபேசியின்றி இணைய வகுப்பில் மாணவர்கள் கலந்துகொள்ள முடியாமல் போவதைப் பற்றி மட்டுமே இங்கு பேசப்படும்போதும்,ஆசிரியர்களாய் இருப்பதற்காய் கரித்துக்கொட்டப்படும் போதும் மனம் வலித்தாலும் தம்மிடம் இணைய வகுப்பெடுக்கும் வசதி இல்லாமல் இருப்பது குறித்து ஆசிரியர்கள் கூறிக்கொள்ளவில்லை. மாற்றங்களுக்கேற்ப தம்மை மாற்றிக்கொண்டு பாடம் நடத்தவே கட்டளையிடப்பட்டவர்களாக ஆசிரியர்கள் இருக்கின்றனர்.

வேலை கைவிட்டுப் போய்விடக்கூடாது என்பதற்காக ஊமைகளாயிருக்கப் பழகிக்கொண்டார்கள் என்பதே உண்மை.

கல்வி காசாகிப் போனதால் ஆசிரியர் சேவைக்கு மதிப்புக் குறைந்துதான் உள்ளது. ஆனால் சொற்ப வருமானத்துக்காக ஆசிரியப் பணியைச் செய்பவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் இப்போது அதிகமாயுள்ளது. மாணவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் பற்றியே பேசிப் பெரிதாக்கியிருப்பவர்கள் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் சிறிதேனும் புரிந்து கொள்ள முயற்சி செய்தால் உலகமே எதிர்கொள்ளும் இக்கட்டான சூழலிலும் இந்தக் கல்வி ஆண்டுக்கான படிப்பை காலத்தை வீணாக்காமல் முடித்துவிடலாம். இடர்களோடும் கடமையாற்றும் ஆசிரியர்களை இனிமேலாவது புரிந்துகொள்ள முயற்சியுங்கள்.ஆசிரியப் பணிக்காய் தம்மை அர்ப்பணித்தவர்களை பாராட்ட முடியாவிட்டாலும் தூற்றாமல் இருப்பதே இந்த இக்கட்டான சூழ்நிலையில் மாற்றங்களுக்கேற்ப தம்மை மாற்றிக்கொண்டு பாடம் எடுக்கும் ஆசிரியர்களுக்கு அனைவரும் செய்யும் நற்செயலாக அமையும்.



# அண்டத்தின் வெற்றிடத்தில் பாதுகாப்புடை இல்லாமல் சென்றால் வெடித்து விடுவோமா?



Dr.நிரோஷன் தில்லைநாதன்

நண்பர்களே, எனக்கு ஒரு சுவாரசியமான கேள்வி ஒன்று தோன்றுகிறது. அதைக் கேட்பதற்கு முதல் நீங்கள் என்னுடன் ஒரு இடத்திற்கு வர வேண்டும். அது எங்கே என்றால் ஒரு ஏவூர்தியில், அதாவது rocket இல் என்னுடன் விண்வெளிக்குப் போக வேண்டும். அங்கே போனதும், அந்த ஏவூர்தியின் ஜன்னல் வழியே பார்த்தால், நமது பூமி, சந்திரன், சூரியன் மேலும் பல நட்சத்திரங்கள் தெரியும், இல்லையா? சரி இது எல்லாமே ஒரு புரம் இருக்கட்டும். இப்படி விண்வெளியில் இருக்கும் நாம், சட்டென்று அந்த ஏவூர்தியின் ஜன்னல் அல்லது கதவைத் திறந்து வெளியே சென்றால் என்ன நடக்கும்? Wait... நான் சொல்வது விண்வெளி உடை போட்டுக்கொண்டு இல்லை! சும்மா ஒரு காட்சட்டை மற்றும் T-shirt போட்டுக்கொண்டு வெளியே போனால் எப்படி இருக்கும்? அடடா! இது என்னடா இடக்கு முடக்கான கேள்வியாக இருக்கிறது என்று யோசிக்கின்றீர்களா?

பல அறிவியல் புனைவுத் திரைப்படங்களில் அதாவது Science Fiction படங்களில் விண்வெளி வீரர்களை விண்வெளியின் வெற்றிடத்தில் பல வித்தியாசமான முறைகளில் இறப்பது போல் காட்சிகளைக் காட்டுவதைப் பார்த்திருப்பீர்கள். ஆனால், அப்படி இறப்பது சாத்தியமானதா? அப்படி இறந்தாலும், படங்களில் வருவது போல் கொடூரமான முறையில் இறப்போமா?

நான் ஒன்றை மட்டும் சொல்லிவிடுகின்றேன். விண்வெளி உடை இல்லாமல் நீங்கள் விண்வெளியில் இருக்கும் போது கண்டிப்பாக வெடித்துச் சிதற மாட்டீர்கள். இது என்ன தான் பல ஆண்டுகளாக நம்பப்பட்டு வந்திருந்தாலும் இதற்குச் சாத்தியமே இல்லை என்று விஞ்ஞானிகள் கூறிவிட்டார்கள்.

இதைத் தொடர்ந்து விண்வெளியில் பாதுகாப்பில்லாமல் இருந்தால் நமது இரத்தம் கொதித்து நாம் இறந்து விடுவோம் என்று சிலர் கூறினார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், பொதுவாகக் காற்றின் அழுத்தம் குறையும் போது நீர்மங்களின் கொதிநிலையும் சேர்ந்து குறையும். எனவே விண்வெளியில் காற்றின் அழுத்தம் இல்லாத காரணத்தால், இதன் விளைவாக அனைத்து நீர்மங்களும் உடனடியாக கொதித்துவிடும். சரி, இது என்ன தான் உண்மையாக இருந்தாலும், இப்படி நமது இரத்தம் கொதிக்கும் என்பதற்குச் சாத்தியமே இல்லை. ஏனென்றால் நமது உடல் ஒரு மூடப்பட்ட மேற்பரப்பைக் கொண்டது. அத்துடன் அதிலுள்ள நீர்மம் அதாவது இரத்தம் நேரடியாக வெற்றிடத்துடன் தொடர்பில்லாமல் நமது உடலினுள் தான் செயல்படுகிறது. நமது உடலிலுள்ள அழுத்தம் மற்றும் வெப்பநிலை இரத்தத்தினை கொதிக்கும் அளவிற்கு மாற்றிவிடாது. எனவே இதுவும் நடக்க இயலாத காரியம் தான்.

சரி இது எல்லாம் சாத்தியம் இல்லையென்றால், இதைப் பார்ப்போம். விண்வெளி உடை இல்லாமல், நமது உடல் உறைந்துபோய் விடுமா? நண்பர்களே, இது கூட கண்டிப்பாக நடக்காது. என்ன தான் விண்வெளியின் வெப்பநிலை வெறும் 2.7 கெல்வின், அதாவது −270 டிகிரி செல்சியசாக இருந்தாலும், நமது உடலில் இருக்கும் வெப்பத்தைக் கடத்துவதற்கு விண்வெளியில் ஏதாவது இருக்க வேண்டும், அதாவது ஒரு வெப்ப பரிமாற்ற முறையில் நமது உடலிலிருந்து வேறு ஏதாவது ஒரு ஊடகத்துக்கு வெப்பம் போக வேண்டும். எளிமையாகக் கூறினால் காற்று போன்ற ஏதாவது ஒரு ஊடகம் இருந்தால் தான் வெப்பம் ஓரிடத்தில் இருந்து வேறொரு இடத்திற்குச் செல்லும். வெற்றிடத்தில் காற்றில்லாததால் நமது உடலில் இருந்து வெப்பம் போக முடியாது, எனவே நமது உடலைக் குளிரச் செய்து உறைய வைக்க முடியாது.

சரி அப்ப ஆக மொத்தத்தில் விண்வெளி உடை இல்லாமல் நம்மால் விண்வெளியில் இறக்கவே முடியாது, சரி தானே? தயவு செய்து அதை மட்டும் செய்துவிடாதீர்கள் நண்பர்களே. விண்வெளியில் இறக்காமல் இருப்பதற்கு நாம் ஒன்றும் Super Man கிடையாது. நீங்கள் கண்டிப்பாக இறந்துவிடுவீர்கள். அது ஏன் என்றால், விண்வெளி உடை இல்லாமல், முதலில் உங்கள் உடலில் காணப்படும் அனைத்துக் காற்றும் உங்கள் உடலை விட்டு நீங்கிவிடும். அதுவும் மூக்கினூடாக மட்டும் இல்லை, உங்கள் உடலில் காணப்படும் அனைத்து வழிகளாலும் மிக விரைவாக வெளியேறும். தொடர்ந்து இன்னும் ஒரு 10 – 15 வினாடிகளில் நீங்கள் மயங்கிவிடுவீர்கள், ஏனென்றால் மூளைக்குச் செல்ல வேண்டிய இரத்தம் சரிவரச் செயல்படாததால், மூளைக்குத் தேவையான ஆக்சிஜன் கிடைக்காது. தொடர்ந்து காற்றின் அழுத்தம் இல்லாத காரணத்தால், நமது உடலின் மேற்பரப்பில் காணப்படும் அனைத்து இரத்தக் குழாய்களையும் பாதித்துவிடும், குறிப்பாக நமது கண்களின் இரத்தக்குழாய்கள் உடைந்துவிடுவன. இதன் விளைவாக நமது உடலில் காணப்படும் நீர்மம் வெற்றிடத்துடன் நேரடியாகத் தொடர்பில் இருக்கும், எனவே இதனால் அந்த நீர்மம் உடனடியாக கொதிக்கத் தொடங்கி, இறந்துவிடுவீர்கள். சபாஸ்... கேட்கவே தலை சுற்றவில்லையா?

சரி நண்பர்களே, இனி நீங்கள் கூறுங்கள். திரைப்படங்களில் காட்டுவது அனைத்தையும் நாம் நம்பக்கூடாது என்பதற்கு இதுவே ஒரு உதாரணமாகிவிட்டது அல்லவா? எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தை எனது முகநூல் பக்கத்தில் [www.facebook.com/scinirosh] அறியத் தாருங்கள்!




Jaffna Bazar
Jaffna Bazar
2020 ஆண்டுக்கான
புத்தம் புது டிசைன்களை
வாங்கி மகிழுங்கள்!
இனிய
தீபத் திருநாள்
வாழ்த்துகள்
உங்கள் இல்லத்திற்கு தேவையான
அனைத்து மளிகைப்பொருட்களும்
பசுமையான மரக்கறி மற்றும்
கடல் உணவு வகைகளும்
KADHIR BRAND RICE
KADHIR
தஞ்சாவூர் வெள்ளை
பொன்னி புழுங்கல் அரிசி
THANJAVUR WHITE PONNI BOILED RICE
Laila
Basmati
Rice
Love Rice Love Laila
DAAWAT
Devaaya
BASMATI
RICE
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# Tamils and Their Jewells

Bavvatharani R
Nallur

It has been common for both men and women to wear body jewellery since ancient times. Our body is broken by nerves. That is why hitting the soles of the feet causes pain in the scalp. That amount is related to the nerve. In our body, there are parts of the nerve that connect the nerves or stimulate the instincts. By wearing jewellery every part of the body is maintained when pressure and chemical changes occur at these points.

Although there are many great jewels, they are made of metals such as gold, silver and copper, which help to reduce body heat. listing each of the benefits of wearing jewellery such as gold, silver, copper and glass anywhere.

Usually, we see women wearing gold ornaments on the upper body and silver ornaments on the lower body. According to scientific principles, silver reflects well with the power of the earth. At the same time gold works well with the body's energy and light. Such ornaments are considered embodiments of the Goddess Lakshmi, with gold worn above their waist and silver ornaments below it. Therefore, gold is used to decorate the upper parts of the body. Silver is worn on the ankles and on the toes.

Tamil Annai (The Mother Tamil) is praised by ornamenting her with The Five Great Epics of Tamil Literature.

சிரமதில் திகழ்வது சீவக சிந்தா மணி - (Civaka Cintamani, jewellery on forehead)

செவிகளில் மிளிர்வது குண்டல கேசி - (Kundalakesi, stud on ear)

திருவே நின் இடையணி மணிமே கலையாம் - (Manimegalai, girdle on waist)

கரமதில் மின்னுவது வளையாபதி யாம் - (Valayapathi, bangle on hand)



கால் தனில் ஒலிப்பது சிலப்பதிகாரம் - (Silappatikaram, anklet on foot)

கண் கண்ட ஐம்பெரும் காவியத் திலகமே

Tamils have a history predating the Sangam period in the Indian subcontinent. They decorated Hindu deities with gold, silver, copper and brass ornaments that continue to be followed today in Hindu temples across the state. The deities (Utsavars and Moolavars) are decorated with jewels and before going out for a procession, temple priests stand the deity in front of a mirror to show them their image. Such temple jewellery is typically inlaid with diamonds and many other kinds of precious gems (navarathnam). However, gold was, and continues to be considered the most precious and auspicious metal of all.



### Jewellery for the head

Kreedam, golden crown: Jewel wear by Deities and Kings, studded with precious stones and gems. Nethi chutti or Vagupu chutti or Chutti: Jewel for the forehead.

Rakkadi, used in the backhead: to hold the bunch of lengthy soft hair spun and tied Surya & Chandra Pirai, Sun & Moon shaped ornamental jewel: used to decorate their forehead.

Jadanagam: used to tie the hair band from back side.Pa ttam: tied by both bride and groom during wedding on their forehead.

Kandasaram and Kechaparam: tied on the braid. Thirugupoo: round ornament with screw like back used to wore on the back head in the center. Kunjam: women tie it at the end of braid. It stimulates long hair growth.

### Jewellery for the ear

Thodu, ear stud or earrings. Kadukkan: small stud with single stone for men. Olai: large ear studs. Pampadam: gold earring with hallow balls and squares filled with lac. Worn by old ladies with big ear hole. Maattal: chain shaped jewel used to hook in the hair from the earring stud or nose stud. Lolakku: a designer jewel that hung from the ear stud. Kundalam: ear ornament for both men and women. Jimikki: ear stud. Makara kuzhai: fish shaped ear ornament

### Jewellery for the nose

Mookuthi: Nose stead (Mukkuthi). Besari: a stud in gold with stone studded Nose stud or ear stead with a hanging design. Bullakku: A designer jewel that hangs from the nose stead or ear stead.

### Jewellery for the neck

Muthumaalai or Muthucharam Thaali or Suthuru or Mangalyam: groom ties around bride's neck during marriage that show the bondage between them. The shape differs according to the caste. Attigai: necklace jewellery worn very close to neck. Aaram or Haram: Necklace. Maalai or Charam: Made of plain gold or pearls & corals. Kaasu Maalai: long chain made of gold coins. Maanga Maalai: long chain designed like mango (Paisley design) studded with stones and gems. Vettrilai Kovai: betel-leaf-shaped pendants on long chain. Kodi Maalai: a chain made in the shape of leaves and plants of soft designs in plain gold.Sangili: Chain made of gold only.

Kaarai: neck ornament Contrakaram: moon shaped ornament for the chest. Listed out in Sangam literature 'Silapathikaram'. Chavadi: five layers of chain. " Vilakku mooku ": a chain model " Godumai vidhai": a chain model of wheat "Pirandai kattai": a chain model of pirandai plant "Erattai vadam Malai": a type of linked two chains

### Jewellery for the hands

Valayal or Sarivu: bangles made up of plain gold or gold with stones or gems.

Continu/ page28








அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்


இனிய தீபத் திருநாள் வாழ்த்துக்கள்
LAKSHMI IMPEX
LAKSHMI IMPEX
பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
சுவையான இலங்கைக் கருவாட்டுக்கு நாடுங்கள்
தேடி வந்தோரை நாடி வரவழைக்கும்
இலட்சுமி இம்பெக்ஸ்
நாளும் மகிழ்விக்கும்
விலையும் தரமும்...
இலத்திற்கு வேண்டிய அனைது
மளிகைப் பொருட்களையும்
தரமாகவும் மலிவாகவும்
தருகின்றோம்.
DRIED KATTA
fishpoisson katta séché / getrockneter Katta-Fisch
Scomberoides lysan
கட்ட கருவாடு
பெயர் பெற்ற Narresh Brand தயாரிப்புக்கள் எம்மிடம் கிடைக்கும்
NARRESH
THE TASTIER CHOICE
MYSORE DHALL
2 Tier STEAMER
இலங்கை ஆழ்கடலில்
பிடிக்கப்பட்டு சிறந்த சுகாதார
முறையில் தயாரிக்கப்பட்டு ஐரோப்பிய
தரசான்றிதழுடன் இறக்குமதி
செய்யப்பட்ட தரமான கருவாடுகளை
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
LAKSHMI IMPEX Lütgendortmunder Str 67 44388 Dortmund Germany
Tel: 0049 157 3134 7867 | Email: Lakshmiimpexj@gmail.com


இங்கிலாந்தில் பெயர்பெற்ற ஸ்தாபனம்...
DSA
PURE EXOTIC FOODS
DSA Foods
Wholesale Suppliers of Superior Quality
NARRESH
THE TASTIER CHOICE
இலத்திற்கு வேண்டிய அனைத்து
மளிகைப் பொருட்களையும் தரமாகத் தருகின்றோம்.
அனைத்து
வாடிக்கையாளர்களுக்கும்
தீபத் திருநாள்
வாழ்த்துக்கள்
சுவையான இலங்கைக் கருவாட்டுக்கு நாடுங்கள்
DRIED KATTA
fishpoisson katta séché / getrockneter Katta-Fisch
Scomberoides lysan
கட்ட கருவாடு
இலங்கை ஆழ்கடலில் பிடிக்கப்பட்டு சிறந்த
சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு ஐரோப்பிய
தரசான்றிதழுடன் இறக்குமதி செய்யப்பட்ட தரமான
கருவாடுகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
MYSORE DHALL
2 Tier STEAMER
Supplying you with
highest Quality
Products
DSA Foods Unit 11 Watermill Business Center Edison Road, Enfield, EN3 7XF UK
Tel: 0044-203-583-2116 |07889-424-055, 07342-742-069
arthik@dsafoods.com | www.dsafoods.com| www.narresh.co.uk



# திருமந்திரமும் வாழ்வியலும்

55

## சீடர்

சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி

திருமந்திரத்தில் திருமூலநாயனார் சீடன் என்ற சொல்லால் ஞானோபதேசம் பெறும் தகுதியுடைய மாணவனையே குறிப்பிடுகின்றார். நற்குணமுடமை, உண்மை பேசுதல், அன்பு செய்தல், விவேகமுடமை, கருணையுடைமை, குருவின் உபதேசத்தைக் கவனமாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து ஞானம் பெற வேண்டும் என அவாவுடைமை, குருவைப் பின் தொடர்தல் ஆகியவனவே நல் மாணாக்கனுக்குரிய இலக்கணங்கள் ஆகும். பக்குவனுக்குரிய இக்குணங்களை உடையவனுக்கே சற்குரு ஞானொபதேசம் செய்வார், இதை பின் வரும் சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் ஒன்றான அருணந்தி சிவாச்சாரியார் அருளிய சிவஞான சித்தியார் [சுபக்கம்] 113 ஆவது பாடல் மூலம் அறியலாம்.

''ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம்,
உறவு சீலம் வழுக்கிலாத் தவம் தானங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவொடு
அர்ச்சித்தல் ஆதி இழுக்கிலா அறங்களானால்
இரங்குவான் பணி அறங்கள்''

ஒழுக்கம் முதல் அர்ச்சித்தல் வரை ஆகிய செயல்கள் இறைவனால் தரப்பட்ட குற்றமில்லாத அறங்கள் என்பதை அறிந்து செய்தால், அவை அறமாக முடியும். அவற்றைச் செய்தால் அவற்றைத் தனக்குச் செய்யும் பணியெனக் கொண்டு அவற்றிற்குரிய பயனை இறைவன் அளிப்பான்.

நல்ல சீடனுக்கு அடையாளம் இவையே எனக் கூறும் திருமந்திரம் பாடல் 1703

''சற்குணம் வாய்மை தயாவிவேகம் தண்மை
சற்குரு பாதமே சாயைபோல் நீங்காமை
சிற்பர ஞானம் தெளியத் தெளிவுஓர்தல்
அற்புதமே தோன்றல் ஆகும் சற்சிடனே''

நல்ல குணம், உண்மையே பேசுதல், இரக்கம், அறிவு, பணிவு, நல்லாசிரியன் திருவடிகளே துணை என்று, நீங்காது அவரை நிழல் போல் தொடர்ந்திருத்தல், தத்துவ ஞான மெய்ப்பொருளான இறையருளை உணர்தல், உணர்ந்ததை ஆய்ந்தறிந்து தேர்தல், அற்புத சாதனைகள் புரிதல் ஆகியவை நல்ல மாணவனுக்குரிய மேலான உயர்ந்த நல்ல குண இயல்புகளாகும்.

பக்குவன் பற்றி கூறும் திருமந்திரம் பாடல் எண் 1690

''தொழில் அறிவாளர் சுருதி கண்ணாக
பழுது அறியாத பரம குருவை
வழி அறிவார் நல்வழி அறிவாளர்
அழிவு அறிவார் மற்றை அல்லாதவரே''

பேரின்ப முத்தியை அடையும் சரியான வழி அறிந்து, அதனை ஆளும் வல்லமை பெற்றவர்கள், வேத ஆகம நூல்களைக் கண்போலக் கற்றுக் குறையொன்றும் இல்லாத சீடனைக் கரையேற்றும் செயல் திறம் உடைய ஆசிரியனை வழிபடும் முறை அறிந்தவர்கள், நல்வழிச் செல்லும் மார்க்கம் உணர்ந்தவர் ஆவார்கள். இதனை அறியாத மற்றவர்கள் தமக்கு வரப்போகும் அழிவை அறியாதிருப்பவர்களே ஆவர்.

பரம்பொருள் வித்தை பக்குவர்க்கு அருளுக எனக் கூறும் பாடல் எண் 1692

''பதைக்கின்ற போதே பரம்என்னும் வித்தை
விதைக்கின்ற வித்தினை மேல்நின்று நோக்கிச்
சிதைக்கின்ற சிந்தையைச் செவ்வே நிறுத்தி
இசைக்கின்ற அன்பருக்கு ஈயலும் ஆமே''

இறை அருளைப் பெறத் துடிக்கும் உள்ளம் பதைபதைக்கும். அந்த நிலையிலேயே பரம்பொருள் ஞானம் என்னும் விதையை விதைக்கின்ற மூலப் பொருளை நெற்றிப் புருவ நடுவில், மேல் நோக்கிப் பார்த்து, உலக இச்சையில் நாட்டம் கொண்டு, உள்ளத்து உறுதியைக் கெடுக்கின்ற மனதை ஒருமுகப்படுத்தி, அப்பரம்பொருள் சிந்தனையில் இலயித்து, ஒன்றி இருக்கச் செய்து, அப்பரம்பொருள் உணர்வோடு கலந்து நிற்கும் சீடர்களுக்கு உபதேசிப்பது உத்தமம் ஆகும்.

நல்ல சீடனுக்கு அடையாளம் கூறும் திருமந்திரம் பாடல் எண் 1696

சாத்திக னாய்ப் பரதத்துவம் தான்உன்னி
ஆத்திக பேத நெறி தோற்றமாகியே
ஆர்த்த பிறவியின் அஞ்சி அறநெறி
சாத்த வல்லான் அவன் சற்சீடனாமே

ஆரவார அலை ஓசைகள் அற்று ஆழ்கடல் அமைதியாக இருக்கின்ற மனநிலை கொண்டவனாய், பரம்பொருள் அன்றி வேறு எது பற்றியும் அறியாத தன்மையுள்ளவனாய், கடவுள் ஒருவன் உண்டென நம்பும் இறைபற்றாளர்கள் பலவாகச் சொன்னவற்றில் ஒன்றை ஏற்பவனாய், வினைப் பயனால் சேர்த்துக் கட்டப்பட்ட பிறவிகளை எண்ணிப் பயந்து, அவை எய்தாமல் தடுக்க மேலான நல்லொழுக்க நெறிவழி நின்றொழுகுபவனே நல்ல சீடனாவான்.

ஞானம் பெற நல் ஆசான் அடிபணிக எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 1698

''அடிவைத்து அருளுதி ஆசான் இன்றுஉன்னா
வடிவைத்த மாமுடி மாயப் பிறவி
அடிவைத்த காய அருட் சத்தியாலே
அடிபெற்ற ஞானத்தன் ஆசற்று உளோனே''

ஆசானே! நீங்கள் உங்கள் திருவடிகளை என் தலைமேல் வைத்து அருளுக, என்று தியானித்தவுடனேயே, குருவினுடைய திருவுருவம் தன் மனதில் பதிந்த அக்கணமே, தொடர்ந்து தோன்றி மறையும் மாயப் பிறவி காய்ந்து தீய்ந்து போகும். அருளுருவான பராசக்தியின் துணையாலே, தவ ஞானம் சிறக்கப் பெற்ற இவனே, குற்றம் குறையற்ற நல்ல மாணாக்கனாவான்.

அபக்குவன் (பக்குவம் இல்லாத மாணவன்) பற்றி திருமந்திரம் பாடல் எண் 1680

''குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழி விழுமாறே''

பக்குவம் இல்லாத சீடர் [மாணவர்] அறியாமையைப் போக்கும் நல்லாசிரியனைத் தேடிப் போகமாட்டார்கள். அறியாமையை நீக்க முடியாத ஒருவரை ஆசிரியராகக் கொண்டு அவரிடம் போவார். இப்படி அறிவு இல்லாதவரும், அறிவு புகட்ட முடியாதவரும் கூடி ஒன்று சேர்ந்து இருப்பது, குருடருக்கு வழிகாட்டக் குருடர் முற்பட்டு இருவரும் துன்பக் குழியில் விழுந்து துயருறுவதைப் போன்றதாகும்.







# பிளாஸ்டிக் முட்டையும், பிளாஸ்டிக் அரிசியும்!

பிளாஸ்டிக் முட்டை பற்றிய வதந்தி தற்போது இலங்கையில் பரவியுள்ளது. இதே மாதிரித்தான் முன்னர் வந்த பிளாஸ்ரிக் அரிசி பற்றிய வதந்தியும். வதந்தி பரப்புவதில் இன்பம் காண்பவர்கள் பலர் இருக்கிறார்கள். 'கேட்பவர்கள் கேனையர்கள் என்றால் கேழ்வரகில் நெய்வழியும்' என்ற கிராமத்துச் சொல்லடைதான் இதற்கான பதில். ஒரு முட்டை செய்வதற்கான பிளாஸ்டிக்கின் விலை, தொழில் நுட்பம், கூலி எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்தால் கோழி இயற்கையாக இடும் முட்டையின் விலையிலும் அதிகமாக இருக்கும். இந்நிலையில் வியாபாரிகள் பிளாஸ்டிக் முட்டை விற்று லாபமடைய முடியுமா? பிளாஸ்டிக் அரிசி சாத்தியமா?

### பிளாஸ்டிக்கில் அரிசி செய்வது சாத்தியமா?

பிளாஸ்டிக் அரிசி, உண்மையான அரிசிபோல கொதி தண்ணீரில் வேகுமா? என்ற பல கேள்விகள் எழுந்தாலும் பிளாஸ்டிக் என்றவுடன் எமக்குள் ஒருவித பயம் ஏற்படவே செய்கிறது. ஹபிளாஸ்டிக் அரிசி, சந்தைக்கு வந்திருப்பதாகச் சொல்வது முற்றிலும் புரளிக் கதை!

2011-ஆம் ஆண்டு வியட்நாமிய இணையப் பத்திரிகை ஒன்றுதான் முதன்முதலில் பிளாஸ்டிக் அரிசி சந்தைக்கு வந்திருப்பதாகவும், அது சீனாவில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் செய்தி வெளியிட்டது. அதன் பின்னர், பிளாஸ்டிக் அரிசி குறித்து வெளிவந்த செய்திகள் அனைத்துமே வியட்நாமிய இணையப் பத்திரிகை வெளியிட்ட செய்தியைச் சார்ந்தே இருந்தன. இந்த



ஆசி கந்தராஜா
(அவுஸ்திரேலியா)

கலப்பட அரிசியானது உருளைக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு போன்ற மாச்சத்துள்ள கிழங்குகளை அரைத்து, அரிசி போன்று செய்யப்படுவதாகவும் இரசாயனங்களைப் பூசி அவை விற்கப்படுவதாகவும் சொல்லப்பட்டது. சீனாவின் புகழ்பெற்ற 'வுச்சாங்' ரக அரிசியைப் போன்று தோற்றமளிக்க கலப்பட ரக அரிசிகளில் வாசனைத் திரவங்கள் தெளிக்கப்படுவதாகவும் பின்னர் செய்திகள் வெளிவந்தன. ஆனால் எந்த செய்தியிலும் நேரடியாக பிளாஸ்டிக் கலக்கப் பட்டதாகத் தகவல்கள் இல்லை. பிளாஸ்டிக்கை அரைத்து அரிசிகளின் அச்சுகளாக மாற்றுவதன் மூலம் எந்தவொரு வணிக லாபமும் பெற்றுவிட முடியாது. கலப்படம் செய்யப்படுவது இலாப நோக்கத்திற்காக மட்டும்தான். ஒரு கிலோ அரிசியைவிட ஒரு கிலோ பிளாஸ்டிக்கின் விலை அதிகம் என்பதால் வியாபாரி இதில் எந்தவித இலாபத்தையும் பெறமுடியாது. அதுமட்டுமல்ல அரிசியில் பிளாஸ்டிக்கை கலந்தால் உலை கொதிக்கும்போது அல்லது அரிசி அவியும்போது பிளாஸ்டிக் உருகி விடுமல்லவா?

நாம் உண்ணும் பலவிதமான உணவுகளில் கலப்படம் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், ஒட்டுமொத்தமாக பிளாஸ்டிக்கைக் கொண்டு வாளி, கோப்பை, கதிரை, மேசை செய்வது போல, அரிசி தயாரிப்பது சாத்தியமில்லை.

ஐரோப்பிய நாடுகளில் திடீர் நூடுள்ஸ் போன்று திடீர் அரிசிப் பைகள் விற்கப்படுகின்றன. அந்த அரிசிப் பையை கொதி தண்ணீரில் போட்டால் சில நிமிடங்களுக்குள் பைக்குள் இருக்கும் அரிசி அவிந்து சோறாகிவிடும். இது இயற்கையான அரிசி இல்லை. சரியாகச் சொன்னால் இது நூடுள்ஸ் அரிசி. இதிலும் பிளாஸ்டிக் சேர்ப்பதில்லை.

சமூக வலைத் தளங்களில் பிளாஸ்டிக் அரிசியினால் சமைக்கப்பட்ட சோறு எனக் காட்டி, அதனை உருண்டையாக்கி, நிலத்தில் அடித்தும் காண்பிக்கிறார்கள். அரிசியில் இயற்கையாகவே அமைலோஸ் (இனிப்புத் தன்மை), அமைலோஸ்-பெக்ரின் (பசைத்தன்மை) என்ற இரண்டு வேதிப் பொருள்கள் உண்டு. இற்றின் அளவுக்கேற்றபடியே அரிசியின் தன்மை மாறுபடும். குச்சிகளால் சாப்பிடும் சீனர்களுக்கு பசைத் தன்மையுள்ள சோறு வேண்டும். இந்தியர்களுக்கு உதிர்ந்த சோறு வேண்டும். இதனால் ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் ஸ்டிக்கி ரைஸ் எனப்படும் இயல்பிலேயே ஒட்டும் தன்மையுடைய அரிசி வகைகள் பயிரிடப்படுகின்றன. இதனால்தான் நம்மவர்கள் இதை போஸ்டர் ஒட்டப் பாவிப்பது. பசைத் தன்மையுள்ள அரிசி மாவில் செய்யப்பட்ட பிடி கொழுக்கட்டையை நிலத்தில் எறிந்து பாருங்கள் அது உடையாதல்லவா? அது மாதிரித்தான் இதுவும்.

இந்த மாதிரியான செய்திகளை



ஆதாரமும், உண்மைத் தன்மையும் தெரிந்தால் மட்டுமே பகிரவேண்டும். இன்றுவரையும் நிரூபிக்கப்படாத இந்தச் செய்திகள் அனைவரையும் அச்சுறுத்தும் வதந்திகளாகவே பல மொழிகளில் பரவி வருகின்றன. இதே போன்றதுதான் பிளாஸ்டிக் முட்டைக் கதையும்!




அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



# வேடுக்குநாறி மலையும் அண்மைய சர்ச்சைகளும்



## நம் நிலத்தின் தோன்மைக் கதைகளை மாற்றும் முயற்சியில் தொல்லியல் திணைக்களம்?

வவுனியா வடக்கின் நெடுங்கேணி நகரிலிருந்து சுமார் ஏழு கிலோமீற்றர்கள் தூரத்தில் அமைந்திருக்கின்ற எல்லைக்கிராமங்களில் ஒன்றுதான் ஒலுமடு. ஒலு என்று சொல்லப்படுகின்ற ஒரு வகைத் தாவரச் செடிகள் இங்குள்ள குளத்தில் அதிகமாக வளர்ந்து நின்ற காரணத்தினால் ஒலுமடு என்ற காரணப் பெயரைப் பெற்றது இந்தக் கிராமம்.

எளிமையும் இயற்கை அழகும் நிறைந்திருக்கின்ற கிராமத்தின் மையப்பகுதியிலிருந்து வண்டில் பாதை வழியாக சுமார் நான்கு கிலோமீற்றர்கள் வனப்பகுதிக்குள் பயணப்படுகின்ற போது இயற்கை அரணென நிமிர்ந்து நிற்கின்ற வெடுக்குநாறி மலைத் தொடர் பகுதியின் ஆரம்பப் பகுதியைக் காணலாம். பெரும் கற்கள் உருண்டு திரண்டு காட்டின் பெரு மரங்களின் இடையே உருட்டி விடப்பட்டதைப்போல காட்சியளிக்கும் சிறு குன்றுப் பகுதிகளும், ஓங்கி வளர்ந்து நிற்கின்ற காட்டு மரங்களும் அவற்றின் கீழ் உள்ள சிறு புதர்களும் கொடிகளும் செடிகளுமாக அந்த வனமும் இணைந்த மலைக்குன்றுகளும் காட்டுகின்ற காட்சிகள் அற்புதமானவை.

சர்மிலா வினோதினி
திருநாவுக்கரசு (இலங்கை)





காட்டின் மணத்தை நுகர்ந்து கொண்டும், காட்டின் ஒலியை செவிமடுத்துக் கொண்டும் நடந்து செல்ல வெடுக்குநாறி மலையின் முதற் பகுதியை காணலாம். மலையின் முன்னும் பின்னுமாக ஒரு வகை நாற்றம் கொண்ட மரங்கள் காணப்படுவதால் வெடுக்குநாறி மலை என்கின்ற காரணப்பெயரை இந்த மலை பெற்றுக் கொண்டதென அறிய முடிகிறது.

இந்தப்பகுதியில்தான் இந்த மலையின் இக்காலத்து சர்ச்சைக்குரிய தொல்லியல் எச்சங்கள் வெளித்தெரிய ஆரம்பிக்கின்றன. இங்குள்ள மலையின் முகப்புப் பகுதியில் புராதன பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு அவ் எழுத்துக்கள் மழை மற்றும் வழிந்தோடும் நீரினால் அரிப்பிற்கு உள்ளாகாத வகையில் எழுத்துக்களின் மேற்பகுதியில் மலையைக் குடைந்து சிறு ஆழத்தில் நீரோட வழி செய்யப்பட்டிருக்கிறது. இங்கு விநாயகர், அம்மன், வைரவர் ஆகிய தெய்வங்களுக்கு சிலை வைத்து வழிபடுகின்றார்கள் கிராம மக்கள்.

உன்னிப்பான அவதானத்திற்குரிய மலையின் இந்த முதற்பகுதியைக் கடந்து மேலும் சில பல அடிகள் பயணப்பட மலைத்தொடரின் அடுத்த பகுதி வரவேற்கிறது. மென் சாய்வு கொண்ட இப்பகுதியால் மலையில் மேல் ஏறிச்செல்ல ஒரு அகழி போன்ற சிறிய நீர்த்தடாகம் வரவேற்கிறது. ஒரு மனிதனை மூடக்கூடிய அளவிற்கு நீர் நிறைந்து காணப்படுகின்ற சிறு நீர்த்தடாகத்தில் நீர் வற்றாமல் எப்பொழுதும் நிறைந்திருக்கும் என்கின்கின்றார்கள் கிராம மக்கள். அந்த நீர்த்தடாகத்திற்கு மேலே மலையின் சற்று உயரமான பகுதியில் நாகத்தை பிரதிபலிக்கும் கற்தெய்வ வழிபாடு இடம்பெறுகிறது.

நீர்த்தேக்கத்தில் இருந்து பார்க்கின்ற போது மலைநோக்கிச் செல்லும் இடப்பகுதியின் உயரமான ஓரிடத்தில் மலையோடு தொடர்பற்ற, எங்கிருந்தோ கொண்டுவரப்பட்டு பொருத்தப்பட்டது

26 ஆம் பக்கம் பார்க்க...



அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

போன்ற பாரிய கல் ஒன்று சிறு சிறு சதுர வடிவான கற்களை அடித்தளத் தாங்கிகளாக முண்டு கொடுக்கப்பட்டு நிமிர்த்தி வைக்கப்பட்டுள்ளது. புராதன தொழிநுட்பத்தின் இன்னும் ஒரு வடிவத்தை பறைசாற்றுகின்ற இப்பகுதியை கடந்து மலையில் மேல் நோக்கிச் செல்லுகின்ற போது ஒரே சீராக குடையப்பட்ட சிறிய சிறிய குழிகள் தென்படுகின்றன. மருந்துகள் மற்றும் பச்சிலைகளை அரைப்பதற்கான குழிகளாக அவை காணப்பட்டிருக்கலாம் என்கின்ற ஐதீகத்தையும் நம்பிக்கையையும் இக்குழிகளோடு இணைத்துப் பார்க்க இடமிருக்கிறது.

குழிகள் காணப்படுகின்ற அப்பகுதியை கடந்து இன்னும் மேற்சென்று கீழிறங்க மலைத்தொடரில் இயற்கையாகவே அமையப்பெற்ற சிறு குன்றொன்று தென்படுகின்றது. பார்ப்பதற்கு நாகத்தின் தலை போன்று தென்படுகின்ற அந்தக் குன்றில் பாம்பின் முகத்தில் தெரிகின்ற பக்க வளைவுகள் விளிம்புச் சதைகளைப் போன்ற உன்னிப்பான அவதானத்திற்குரிய கற் சிற்ப வேலைப்பாடுகள் செதுக்கப்பட்டுள்ளன.

அந்தப்பகுதியில் இருந்து மலையில் செங்குத்தாக இன்னும் மேல் நோக்கிச்செல்ல மலையின் உச்சிப் பகுதிக்குச் செல்வதற்குரிய சிறு சமவெளிப் பகுதி தென்படுகின்றது. இச் சமவெளிப்பகுதிக்கு செல்வதற்காக அலுமினிய வேலைப்பாடுகளுடை படிகளை ஆலய நிர்வாகத்தின் முயற்சியால் அமைத்திருக்கிறார்கள். ஆனால் முழுமையாக அமைப்பதற்கு தொல்லியல் திணைக்களம் அனுமதியை வழங்காத நிலையில் அச் செயற்பாட்டிற்கு எதிராக வழக்கினையும் தொடர்ந்திருக்கிறது




திணைக்களம். மலையின் சிறு சமவெளிப்பகுதியிலிருந்து மலையின் அடுத்த உச்சிக்கு ஏறிச் செல்வதற்கான எவ்விவிதமான படிகளோ, அமைப்புக்களோ அற்ற நிலையில் இயற்கையாக அமைக்கப்பட்டிருக்கின்ற சிறிய மரக்குற்றியிலான தாங்கிகளையும், பெருங் கொடிகளையும், மரங்களையும் பற்றிக்கொண்டு மேலே ஏற முடிகின்றது.

மலையின் உச்சியில் கற் பாறைகளை அடுக்கி அவற்றின் மேல் அமைக்கப்பட்டிருக்கின்ற புராதன ஆதி இலிங்கேச்சரர் கண்களில் தென்படுகிறார். கூம்பு வடிவிலான பாறைய சதுரக் கற்களின்மேல் அடுக்கி ஒட்டி நிமிர்த்தி வைக்கப்பட்டிருப்பது போன்று தென்படுகின்றது மக்களின் நம்பிக்கைக்குரிய ஆதி இலிங்கேச்சரர் சிவலிங்கம். இந்தச் சிவலிங்கம் இராவணன் காலத்திற்குரியதாக இருக்கலாம் என்கின்ற நம்பிக்கைய வெளிப்படுத்துகின்றனர் கிராம மக்கள்.

இயற்கை மூலிகைகள் நிறைந்த அந்தப் பகுதியிலிருந்து இன்னும் சற்று மேல் நோக்கி ஏறிச்செல்ல அந்த மலையின் சமவெளி தென்படுகின்றது. அங்கு சிவலிங்கம் ஒன்றை பிரதிட்டை செய்து வழிபடுகிறார்கள் கிராம மக்கள்.

சுமார் முன்நூறு அடிகளுக்கு மேற்பட்ட மலையுச்சியின் சமவெளியில் ஏறிநிற்க காட்டின் காற்று மேனியைத் தழுவ அங்கிருந்து வன்னிப் பிராந்தியத்தின் அழகை கண்டுகொள்ள முடிகின்றது. ஒரு பக்கம் வவுனியாவின் காட்சிகளும், மறுபக்கம் மதவாச்சியின் காட்சிகளும், இன்னும் ஒரு பக்கம் பதவியா போன்ற பிரதேசங்களும் தென்படுகின்றன என்பது கிராம மக்களின் கணிப்பு.

புவியின் பௌதீகவியல் ரீதியில் இப்படியான மலை உருவாக்கச் செயற்பாட்டிற்கு பல்வேறு காரணிகள் துணை புரிகின்றன. புவியின் உட்பகுதியில் இயங்குகின்ற மேற்காவுகளை ஓட்டங்களின் காரணமாகவும், புவித்தகடுகளின் ஒருங்குதல் செயற்பாட்டின் காரணமாகவும் மலை உருவாக்கச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. அந்த வகையில் நெடுங்கேணிப் பிரதேசத்தின் பௌதீக இட அமைவும், இவ் வெடுக்குநாறி மலையின் புவியியற் காரணிகளும் கற்றுணரப்பட வேண்டிய அதே நேரத்திலே கண்ணுக்கு எட்டிய தூரம்வரை பரந்து விரிந்திருக்கின்ற அந்தக் காடுகளும் காட்டு மரங்களும், இந்த மலையும் தேக்கி வைத்திருக்கின்ற தொன்மத்தின் கதைகள் பலவாகும்.

இலங்கையின் குடித்தொகை வரலாற்றில் வன்னிப்பிராந்தியம் காலத்தால் முற்பட்ட வரலாற்றைப் பதிவு செய்கின்றது. இங்கு குளங்களை அடிப்படையாக வைத்து உருவாகிய குடியேற்றத்திட்டங்கள் பெருங்கற்காலத்தின் எச்சங்களையும் அதற்கு முந்திய குறுணிக் கற்கால எச்சங்களையும் பறைசாற்றுபவைஎன்பதுவரலாற்றுஆசிரியர்களின் கருத்தாகும். குளங்களை அச்சொட்டாகக் கொண்ட கிராமங்களும் இன்னும் பூனகரி, மன்னாரின் கட்டுக்கரை மற்றும் தேக்கம் பகுதிகள், வவுனியாவின் செட்டிகுளம், மாமடுவ போன்ற பல பிரதேசங்கள் இவற்றின் எச்சங்களாக எஞ்சி நிற்கின்றன. இங்கு கண்டு கொள்ளப்பட்ட தொல்லியல் எச்சங்கள் இதனை உறுதி செய்கின்றன. இலங்கையில் விஜயன் வருகைக்கு முன்னர் இங்கு ஜக்ச, நாக என்கின்ற இரண்டு இனக் குழுக்கள் வாழ்ந்ததாகவும் அவர்களுக்கிடையே பண்பாட்டு ரீதியான வேறுபாடுகள் காணப்பட்டதாகவும் உடலியல் அடிப்படையில் ஒத்த இயல்புகளைக்கொண்டிருந்ததாகவும் வரலாறு சொல்கிறது.


நாக வடிவிலான சிறிய பாறை

நன்றி சர்மிலா வினோதினி

மிகுதி அடுத்த வெற்றிமணியில்...



# எமிலியைத் தேடி ஒரு பயணம் !



காால்களில் சக்கரமும் தோள்பட்டைகளில் இறக்கைகளும் இருப்பதாக நினைத்துக்கொண்டு ஊரெல்லாம், நாடெல்லாம் சுற்றி வரும் காலம் போய், இணைய வலையிலும் வீட்டுச்சிறையிலும் இருக்கும் நாட்களைத் தந்திருக்கிறது 2020, இருப்பினும் அழகான பயணங்களின் நினைவுகளை அசைபோட, அடுத்துவரும் அழகிய நாட்களில் மேலும் பயணப் பட இந்த நாட்களை செலவழிக்கலாம் !

பல நாட்கள் கழித்து முன்னர் எழுதிய நாட்குறிப்பை திறந்து பார்த்தபோது என்றோ ஒருநாள் ஒளித்துவைத்த மயிலிறகைப் போன்று முன்னால் தோன்றியது அந்தப் பயணம், பாரிஸ் பயணம். பாரிஸ் என்றதும் கண்முன்னால் விரிவது விண்ணுயர் ஈபில் கோபுரம், ஆனால் இந்த பாரிஸ் பயணம் அதனைத் தேடி அல்ல, அவளைத் தேடி, ‘எமிலியைத் தேடி...’



**தனசேகர் பிரபாகரன்**
**(தமிழ்நாடு)**

## யார் அந்த எமிலி ?

இந்த எமிலி ஒரு பிரெஞ்சு திரைப்படத்தில் வரும் கதாபாத்திரம், அடடே இதையெல்லாம் தேடியா ஒரு பயணம் என்று நீங்கள் கேட்கலாம், பயணிப்பவர்கள் பலவிதம், ஊரைத்தேடி, உறவைத்தேடி பயணிப்போர்க்கு இடையே இந்த எமிலியைத் தேடி பயணிக்க என்ன காரணம் ?



2001 இல் பிரெஞ்சு மொழியில் ‘Le Fabuleux Destin d'Amélie Poulain” என்ற திரைப்படம் வெளியாகிறது, படத்தின் நாயகியாக ஆதரி தாத்து நடிக்கிறார், ஒரு சாதரணமான படமாக ஆரம்பித்து பின்னர் அந்த திரைப்படத்திற்கே உரிய சின்ன சின்ன அழகான விடயங்களால் உலகமக்கள் பலரை கவர்ந்துவிடுகிறது அந்தப்படம். ஒரு பாரிஸ் நகர்புறத்தில் கதைக்களம் அமைத்து அந்த நகரினூடே எமிலியை ஒரு அதிகம் பேசாத தனித்திருக்கும் கதாநாயகியாக எமிலியை படைத்து, அவளை சுற்றியிருக்கும் மனிதர்கள் வாழ்க்கையில் அவளை சின்ன சின்ன மகிழ்ச்சியை கொண்டுவரும் தேவதையாக நடமாடவிட்டிருப்பார் இயக்குனர்.

படத்தின் கதையை சொல்லாமல் சில வரிகளை மட்டும் சொல்கிறேன், அது உங்களை இந்தப் படத்தை பார்க்கத்தூண்டலாம், ஏன் பாரிஸ் நோக்கி பயணிக்கவும் தூண்டலாம் !

இளவயதில் தயக்கமும் தனிமையும் கொண்ட பெண், பாரிஸ் நகரத்தின் ஒரு காபி கடையில் வேலைசெய்துகொண்டு தன்னை சுற்றியுள்ளவர்கள் வாழ்க்கையில் சின்ன சின்ன மகிழ்ச்சித் தருணங்களை கொண்டு வந்து பின்னர் காதலில் விழுந்து தன்னுடைய காதலனை எவ்வாறு காதல் நகரம் பாரிஸில் கைப்பிடிக்கிறாள் என்பதே கதைச்சுருக்கம்.

அன்றாட வாழ்க்கையில் பல காரணங்களுக்காக அழகான சின்ன சின்ன விடயங்களை நாம் மறந்துவிடுகிறோம், அதையெல்லாம் எடுத்து கோர்த்தது போல இந்தத் திரைப்படம் அமைந்திருக்கும். பாரிஸ் நகரத்தில் முக்கிய சுற்றுலா இடங்களில் எல்லாம் கதாநாயகி வலம் வருவது போல அமைக்கப்பட்டிருக்கும், அவள் அதிகம் பேசாமல் ஒரு குறுபுன்னகை மட்டும் புரிவதுபோல கதை செல்ல அவள் செல்லும் இடங்கள் எல்லாம் நமது மனத்திலும் பதிந்துவிடுகின்றன.

பாரிஸ் நகரத்திற்கு சென்று சென் நதி ஓரத்தே அமர்ந்து சற்று கண்ணை மூடி எமிலி நடமாடிய இடங்களை கண்முன்னே ஓடவிட்டு சுற்றிவந்தால் நீங்கள் பாரிஸ் நகர்முழுதும் சுற்றிவந்துவிடலாம். இதுபோல் எமிலியை மனதில் வைத்துக்கொண்டு பாரிஸ் நகரம் சுற்றிவருவது நான் மட்டுமல்ல பலர்.

உதாரணம், திரைப்படத்தில் எமிலி வேலை செய்வதாக வரும் கடை இன்றைக்கு புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாக மாறியிருக்கிறது, பலரும் அங்கு வந்து அந்தக் கடை முன்னே நின்று புகைப்படங்கள் எடுத்துக் கொள்கின்றனர்.

சாதாரண திரைப்படம் தானே என்ன இருக்கிறது இதில் என்றால், இதைக் கேளுங்கள், சமீபத்தில் கண்ணாடித் தவளையின் ஒரு அரிய இனம் கண்டுபிடிக்கப்பட்டது, அதனை கண்டறிந்த அறிஞர் அதற்கு எமிலி என்று பெயர் சூட்டினார், அதற்கு அவர் சொன்னது அந்தத் திரைப்படத்தில் சின்ன சின்ன விடயங்கள் கூட அழகாக காட்டப்பட்டிருக்கும் அதுபோல் இந்த பிரபஞ்சத்தில் இந்த சிறிய கண்ணாடித் தவளை இனமும் அழகானது தான் அதனால் அந்தப் பெயரை சூட்டினேன் என்றார்.

மாடமாளிகைகள் கட்டி சீமாட்டியாய் வாழ்வதில் இன்பம் இல்லை அவளுக்கு !

கடைக்காரன் அறியாமலே தானிய மூட்டைக்குள் கைவிட்டு விளையாடுவதிலும், உறைந்து போன கிரீமின் மேல்பகுதியை ஸ்பூனால் தட்டியும், தேவதையைப் போல் மற்றவர்களின் சின்ன சின்ன ஆசைகளை நிறைவேற்றுவதில் இன்பம் அடைந்த அதிகம் பேசாத, நண்பர்கள் இல்லாத, பெண்களின் அடையாளம் எமிலி!



நீங்களும் ஒருமுறை எமிலியை பார்த்துவிட்டுட்டு அவள் நடமாடிய பாரிஸ் நகரினூடே நடந்து ரசித்து வாருங்களேன் !

---

12 ஆம் பக்கத் தொடர்ச்சி...

**அது அப்படித்தான் என்று துண்டிக்கப்படும் கேள்விகள்**

வாழ்வின் அனைத்து விடயங்களிலும் உரிமையோடு பிறக்கின்ற உயிர்கள் ஒரு தாய் தந்தையைக் கருவியாகக் கொண்டே பிறக்கின்றனவே தவிர அவர்களுக்கான உடமையாக பிறக்கவில்லை. ஆகவே அவர்கள் ஆற்றல் பெறும் வரை பாதுகாத்து நல்வழி காட்டி அவர்கள் சுயமாக செயற்பட பெற்றோர், பாதுகாவலர் உதவ வேண்டும். முடியாது விடின் அவர்களுக்கு வழி விட்டு ஒதுங்கிக் கொள்ள வேண்டுமே தவிர அவர்களின் ஆற்றலை உறிஞ்சி பதிவேற்றம் செய்யப்பட்ட பொம்மைகளாக உருவாக்கி எதிர்கால சமூகத்திற்கு மிகப்பெரும் குற்றத்தை செய்து விடக் கூடாது.

உங்கள் அனுபவங்களை பிள்ளைகளோடு பகிர்ந்து பேசி மகிழுங்கள். உங்கள் தவறுகளையும் ஒப்புக்கொண்டு சிரித்து மகிழுங்கள் உங்கள் பிள்ளைகள் குறிப்பறிந்து செயற்படத் தொடங்கி விடுவார்கள். தோழமையோடு அணுகிப் பாருங்கள் நீங்கள் சாய்வதற்கு ஏற்ற உன்னத தோள் அவர்களிடமே இருக்கிறது.




அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

# TAMILS AND THEIR JEWELLS

21 Page Continu...

Kaikappu: bangles without designs known as Kappu Mothiram or Neli: finger ring. Vangi or Vanki, armband. Nagothu: Naga(snake) shape on vanki. Kanganam (armband) Tholvalai Kappu: used in the shoulder to hold the sari. Nagar or Nagam: A cobra shaped ornament used the upper arms.

### Jewellery for the waist

Araijan kodi or Araijanam Oddiyanam: waist belt used to tighten the sari, in the hip. Aranaal: a chain shaped one used along with inner side of sari at hip. Aranjanam or Araijnan Kayiru or Araijnan Kodi: silver or gold chain for tie around the waist of infants or children and men even thick black or red thread will be used.

Arasala (Arasa ilai): pipal or sacred fig leaf like ornament with waist chain made up of gold or silver for babies (female).

### Jewellery for feet

Silver ornaments wore below the waist are listed below Metti or Minji or Peeli: grooms place it on the bride‘s second finger from toe during wedding Silambu, ring shaped anklet: like hollow pipe that used to contain precious stones, silver balls, pearl or coral beads. The Sangam literature ‘Silapathikaram‘ named after silambu. Sathangai or Salangai: a series of small silver bells and worn in the anklet, used by classical

dancers like Bharathanatyam dancers. Listed out in Sangam literature ‘Silapathikaram‘. Kolusu (Anklet): made in silver with varieties of shape and design. Thandai or Patharasam: same as silambu but it is heavy. Kaappu: (Plain anklets)

---

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## “பிச்சை வேண்டாம்” 1975

தன்மை, நான் அணிந்த அரைப்பாவாடை என்பவற்றால் நான் ஒரு வித்தியாசமான பொருளாக சிலரால் பாடக்கப்பட்டேன். எள்ளல் பேச்சுகளுக்கும் முகம் கொடுக்க நேர்ந்தது. அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெரும்பாலும் ஆண்களே பெண் வேஷமிட்டு நடித்துக் கொண்டிருந்த வேளையில் நான் நடித்து முடிந்து மேடையை விட்டு இறங்கியபோது இது உண்மையான பொம்பிளைதான் என்ற பேச்சுகளும் காதில் விழுந்தன.

பிச்சை வேண்டாம் நாடகத்தில் நான் நடித்தபோது எனக்கு வயது 19. இந்த நாடகம் 1975 இல் இருந்து 1976 வரை 8 தடவைகள் மேடையேற்றப்பட்டது. எத்தகைய விமர்சனங்களையும் எதிர்கொள்வதென்றும் தொடர்ந்தும் காத்திரமான நாடகங்களில் நடிப்பதென்றும் எனக்குள் உறுதியாக இருந்தேன்.

அடுத்த பதிவில் நான் நடித்த இரண்டாவது நாடகமான ‘மழை’ நாடகம் பற்றிய அனுபவங்களை பகிரவுள்ளேன்.

---

10 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## சித்திரக்கவி

பெண்ணினுடைய உதட்டிலே போட்டிருக்கின்றார். அதாவது நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும் என்பது போல. அதாவது பெண்ணுக்குரிய பேச்சின் சுதந்திரத்தை ஆண் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கும் போதுதான் அவனுக்கு அந்த மீசையே உருவாகும் இவ்வாறான உயர்ந்த தத்துவத்தை எழுத்தில் மட்டுமல்ல ஓவியத்திலும் கொண்டு வரலாம் என்பதை இக்கலைஞன் எடுத்துக்காட்டியுள்ளார்.

ஓவியம் கதை கூறும் கலையை இலக்கியமாக்கும் வல்லவர்கள் இலக்கிய காலத்தில் மட்டுமல்ல. இயந்திர உலகத்திலும் வாழுகின்றார்கள் என்பது உண்மையே.

---

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நடுக்கம் கைநடுக்கம் போன்றவை ஏற்படுவது ஏன்?

இவை பல வகை நோய்களுக்கும் உபயோகிக்கப்படுவதுண்டு. இவையும் நடுக்கத்தை ஏற்படுத்தலாம். மருத்துவ ஆலோசனை இன்றி தானாகவே மருந்தை வாங்கிக் குடித்ததால் அவரைப் போல பலருக்கு நடுக்கம் ஏற்படுவதுண்டு.

வலிப்புநோய்க்கு உபயோரிக்கும் Valporate, மனநோய்களுக்கு உபயோகிக்கும் lithium, மனச்சோர்விற்கு உபயோகிக்கும் பல மருந்துகள், சில அன்ரிபயோடிக் மற்றும் அன்ரிவைரஜ் மருந்துகளும் நடுக்கத்தை ஏற்படுத்துவதுண்டு. பார்க்கின்சன் நோய்கது நடுக்கம் ஏற்படும் என்றேன். அதேபோல அந்நோய்க்கு உபயோகிக்கும் Levodopa மருந்தாலும் ஏற்படலாம். தைரொக்சின் மருந்தின் அளவு கூடினாலும் வரலாம். தைரொயிட் சுரப்பி அதிகமாக வேலை செய்யும் நோயிலும் நடுக்கம் வருதுண்டு. இன்னும் பல மருந்துகளால் நடுக்கம் ஏற்படலாம் என்பதால் ஒருவர் தனக்கு புதிதாக நடுக்க நோய் ஏற்பட்டு மருத்துவரிடம் செல்ல நேர்ந்தால் தான் உபயோகிக்கும் அனைத்து மருந்துகளின் பட்டியலை மருத்துவரிடம் கொடுத்து ஆலோசனை பெறுவது அவசியமாகும்.

**போதையும் நடுக்கமும்**

போதைப் பொருட்கள் நடுக்கத்தை ஏற்படுத்தலாம். முக்கியமாக மதுபானமும் புகைத்தலும் நடுக்கத்தை நடுக்கம் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாகும். அதே போல போதையில் மூழ்கியவர் அதைத் திடீரென நிறுத்தினாலும் நடுக்கம் ஏற்படலாம். நிறுத்தும்போது ஏற்படும் நடுக்கம் தற்காலிகமானது சில நாட்களில் தணிந்துவிடும்.

**சிகிச்சை**

நடுக்கம் ஏற்பட்டால் அதற்கான அடிப்படைக் காரணத்தை கண்டறிய வேண்டும். எனவே மருத்துவ ஆலாசனை பெறுவது அவசியம். பெரும்பாலான காரணங்களை விரிவாகவும் தெளிவாகவம் பேசுவதன் மூலம் கண்டறிய முடியும். இருந்தபோதும் இரத்தப் பரிசோதனைகள் மற்றும் CT scan MRI போன்றவையும் தேவைப்படலாம்.

சிகிச்சையின் அடிப்படை காரணத்தை துல்லியமாகக் கண்டறிவதே. மருந்துகள் காரணமாயின் அவற்றை இனங்கண்டு மருத்துவ ஆலோசனையுடன் வேறு மருந்துகளை உபயோகிக்க வேண்டும். போதைப் பொருள்கள் காரணமாயின் அவற்றை நிறுத்த வேண்டும். மது சற்று அருந்தினால் சிலருக்கு நடுக்கம் குறையும். ஆயினும் அவ்வாறு குடிப்பது ஆபத்தானது. அவர்கள் மதுவிற்கு அடிமையாகி சீரழிந்து போவது பெரும் பிரச்சனை ஆகும்.

நடுக்கம் உள்வர்கள் கோப்பி தேநீர் கொக்கோ போன்ற பானங்கள் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும் மனப்பதற்றமும் காரணம் என்பதால் அதைத் தணிக்க முயல வேண்டும். அரிதாக சத்திர சிகிச்சையும் தேவைப்படலாம். எவ்வாறாயினும் பெரும்பாலான நடுக்கங்கள் ஆபத்தற்றவை என்பதால் அச்சமடையத் தேவையில்லை.

நன்றி: ஹாய் நலமா

---

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ‘எங்கடை நாய் ஒவ்வொரு கதவாய் விறாண்டுது’

அவர்கள் திறமைகள் கண்டுபிடிக்கப்படுகின்றன!

சிலர் தமது பெற்றோரால், சிலர் ஆசிரியர்களால், சிலர் நண்பர்களால்..சிலர் தாம் என்றுமே சந்தித்திராத நபர்களால் தம்மை, தமது திறமைகளை, தமது எதிர்கால வாழ்க்கை பாதைகளை கண்டறிந்து கொள்கின்றார்கள்... ‘டேய், இப்படியே போனால் நீ உருப்படமாட்டாய், அந்த வழியில் போ... உனக்கு அது தான் சரி... என்று உங்களுக்கு உணர்த்தப்பட்ட, அல்லது நீங்களாகவே உணர்ந்துகொண்ட கணங்களை...நீங்கள் உண்மையில் யார், உங்களுள் ஒழிந்திருக்கும் அபார திறமைகள் என்ன என்று அறிந்து கொண்ட அந்த யுரேக்கா தருணங்களை ஒரு கணம் எண்ணிப்பாருங்கள்... ஒரு அரை மணி நேரம் அமைதியாக கண்களை மூடி...அரிவரியிலிருந்து இன்று வரை பயணித்த உங்கள் வாழ்க்கையை அணுவணுவாக அனுபவித்து திருமபவும் பயணியுங்கள்...

நீங்களும் ஒரு அபாரமான கண்டுபிடிப்பு என்பதை உணர்வீர்கள்! உங்களை கண்டுபிடித்த ஆக்கிமிடிஸம் உங்களுக்குத் தென்படுவார்! உங்களை உங்களுக்கு உணர்த்தியவர் இன்றும் இருந்தால் அவரை தேடிச் சென்று உங்கள் மரியாதையைச் செலுத்துங்கள்...




அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்






**வெற்றிமைந்தன்**

### 24. புன்னகை மன்னன்

காதலனும் காதலிலும் தற்கொலை செய்து கொள்ளப் போகிறார்கள். அந்தச் சூழலில் 'என்ன சத்தம் இந்த நேரம்' எனும் பாடல் ஒலிக்கிறது. வைரமுத்துவின் வசீகர வரிகளில், இளையராஜாவின் மெல்லிய தாலாட்டில் பாடல் மனதைப் பிசைகிறது.

காதலர்கள் தற்கொலை செய்யப் போகும் காட்சியில் ஒரு பாடலை வைக்க வேண்டுமென்றால் அதற்கு அசாத்தியத் துணிச்சல் வேண்டும். அந்தத் துணிச்சல் பாலசந்தரிடம் இருந்தது என கவிப்பேரரசு வைரமுத்து பின்னர் குறிப்பிட்டார்.

1986ம் ஆண்டின் தீபாவளி வெளியீடாக வந்த இந்தப் படம் வெள்ளி விழா கண்டது. பல வசூல் சாதனைகளை நிகழ்த்தியது. படத்தின் வெற்றி விழாவில் பாலசந்தர் கமலஹாசனுக்கு ஒரு பட்டப் பெயர் சூட்டினார். அது 'புரட்சி மன்னன்'!!

குடும்பத்தில் காதல் ஏற்றுக் கொள்ளப்படாததால் தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்து மலை உச்சிக்கு வருகிறார்கள் காதலர்கள். குதிக்கிறார்கள். காதலி கீழே விழுந்து இறந்து விட, காதலன் மரக்கிளை ஒன்றில் சிக்கி உயிர் பிழைக்கிறான்.

தற்கொலை செய்யத் தூண்டிய குற்றத்துக்காக அவனை ஓராண்டு சிறையில் அடைக்கிறார்கள். சிறைவாசம் முடிந்து




வரும் அவனை ஒரு பெண் துரத்தித் துரத்திக் காதலிக்கிறாள். அவனோ பழைய காதலின் நினைவிலேயே இருக்கிறான். கடைசியில் காதல் கைகூடும் போது நிகழ்கிறது பாலசந்தர் படங்களுக்கே உரிய கிளைமேக்ஸ்.

இளையராஜாவும், வைரமுத்துவும் இணைந்த இந்த சூப்பர் ஹிட் படத்துக்குப் பிறகு அவர்கள் இருவரும் இணையவில்லை என்பது தமிழ்த் திரையுலகிற்கு மாபெரும் இழப்பு என்பதில் சந்தேகமில்லை.

இந்தப் படத்தில் திலீப் என்னும் இளைஞன் இளையராஜாவிடம் கிட்டாரிஸ்ட் ஆக இணைந்திருந்தான். அந்தப் பையன் தான் பிற்காலத்தில் ஆஸ்கர் வாங்கி 'எல்லா புகழும் இறைவனுக்கே' என தமிழில் முழங்கிய ஏ.ஆர்.ரஹ்மான்.

கமலஹாசன், ரேவதி,ஸ்ரீவித்யா, ரேகா, டெல்லி கணேஷ், சுந்தர் கிருஷ்ணா, சுதர்சன், ஜெயலக்ஷ்மி என ஒவ்வொரு காதாபாத்திரங்களையும் பார்த்துப் பார்த்து செதுக்கியிருப்பார் பாலசந்தர். இந்தப் படத்தில் இடம்பெற்ற முத்தக் காட்சிக்காக படத்துக்கு ஏ சான்றிதழ் கொடுக்கப்பட்டது !

என்ன சத்தம் இந்த நேரம், காலகாலமாக வாழும் காதலுக்கு, சிங்களத்துச் சின்னக் குயிலே, மாமாவுக்குக் குடுமா குடுமா, ஏதேதோ எண்ணம் வளர்த்தேன், வான் மேகம் பூப் பூவாய் தூவும், கவிதை கேளுங்கள் என இந்தப் படத்தில் இடம்பெற்ற பாடல்கள் எல்லாமே மிகப்பெரிய வெற்றியைப் பெற்றன.

புன்னகை மன்னன் பின்னர் தெலுங்கில் 'டேன்ஸ் மாஸ்டர்' எனும் பெயரில் டப் செய்யப்பட்டது. சாசாசார்லி எனும் பெயரில் இந்தியில் மொழிமாற்றம் செய்யப்பட்டது.

அந்த ஆண்டு கே.பாலசந்தர் 'சொல்லத்தான் நினைக்கிறேன்' திரைப்படத்தை கன்னடாவில் சுந்தர சொப்னங்களு எனும் பெயரில் எடுத்தார். ஸ்ரீதர் முதன்மைக் கதாபாத்திரத்தில் நடித்த அந்தப் படத்தில் அறிமுகமான நபர்கள் சிலர் உண்டு. அவர்களில் முக்கியமானவர் ரமேஷ் அரவிந்த் !

ரமேஷ் அரவிந்தின் திரை அறிமுகம் சுந்தர சொப்னங்களுடன் துவங்கி பின் பல பரிமாணங்களுக்கு வளர்ந்தது அறிந்த கதை !

### 25. மனதில் உறுதி வேண்டும்




1987ம் ஆண்டில் கே.பாலசந்தரின் இயக்கத்தில் ஒரே ஒரு படம் தான் வெளியானது. அது 'மனதில் உறுதி வேண்டும்'. எஸ்.பி.பாலசுப்ரமணியம், சுகாசினி, ரமேஷ் அரவிந்த், ஸ்ரீதர், விவேக், லலிதாகுமாரி மற்றும் பலர் இந்தப் படத்தில் நடித்திருந்தார்கள். ரஜினிகாந்த், சத்யராஜ் மற்றும் விஜயகாந்த் இந்தப் படத்தில் கௌரவ வேடமேற்றிருந்தார்கள்.

31 ஆம் பக்கம் பார்க்க...









## ஒற்றை பனைமரம் புகழ் புதியவன்


**வணக்கம் நண்பர்களே, இன்று நாம் சந்திப்பது, புதியவன் இராசையாவை. ஈழத்தில் கனகராயன்குளம். விடுதலை இயக்கத்தில் 82 ல் இணைந்து 84 கைது செய்யப்பட்டு வெலிக்கடை, தங்காலை, பூசா முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு 86 மேல் விடுதலை ஆனபின், பிரித்தானியாவுக்கு 86 மார்கழி. இல் இடம் பெயர்ந்தவர் . கணக்கியல் துறையில் பயின்று 15 வருடங்கள் விரிவுரையாளராக கடமையாற்றி பின் திரைத்துறையில் முழு நேரமாக ஈடுபடும் நோக்கோடு வேலையை ராஜினாமா செய்தவர். திரைத் துறையில் முதுமாணி பட்டம் பெற்றவர். 2001 மாற்றம், 2003 கனவுகள் நிஜமானால், 2005 மண், 2015 யாவும் வசப்படும், 2018 ஒற்றைப்பனைமரம் ஆகிய முழு நீழப் படங்களை எழுதி இயக்கியவர்.**

**? ஈழத்தில் ஒரு போராளியாக இருந்து இப்பொழுது ஒரு திரைப் பட இயக்குனராக வாழ்ந்து வரும் நீங்கள், உங்கள் திரைப்படங்களில் ஈழத்தமிழரின் போர் காலத்து கதைகளை கையாண்ட அனுபவம் கொண்டவர். இப்பொழுது நடிகர் விஜய் சேதுபதி அவர்கள் மேல் எழுப்பப்படும் குற்றச்சாட்டை பற்றி என்ன நினைக்கிறீர்கள். அவர் இலங்கை தமிழரான கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனை பற்றிய Bio -Pic ல் நடிப்பது தவறா?**

ஒரு படம் வெளிவரும் முன்னே, ஒரு கலைஞனை அடக்க நினைப்பது தவறு. விஜய் சேதுபதி ஒரு கலைஞனாக எந்த வேடத்திலும் நடிக்கலாம். அவரது உரிமை. ஒரு ஈழத்து போர் வரலாற்றை, தமிழரின் தியாகத்தை, போராட்டத்தை கேவலப்படுத்தும் ஒரு படமாக இந்த படம் உருவாக்கப்பட்டாள் அதை தடை செய்ய சொல்லும் உரிமை பொறுப்பு தமிழருக்கு உண்டு. ஆனால் அதை படத்தை பார்த்துவிட்டு தான் முடிவு செய்ய வேண்டும்.

**? இப்பொழுது எந்த படத்தில் பணி புரிகிறீர்கள்?**

இப்பொழுது யுத்தத்தின் பின்னால் காணாமல் போனவர்கள் பற்றிய கதை ஒன்று அமைத்து படவேலைகளை ஆரம்பிக்க நினைத்த நேரம் உலகத்தையே கொரோணா ஆட்டிப்படைக்க


புதியவன்


பிரபாலினி பிரபாகரன் (அமெரிக்கா)

ஆரம்பித்து விட்டது. பயணிக்க முடியாது என்ற காரணத்தினால் நான் வாழும் பிரித்தானியாவை மையமாக வைத்து ஒரு கதையை உருவாக்கி திரைக்கதை வேலைகளை செய்து வருகிறேன். இது அகதியாக வந்த ஒரு இலங்கை தமிழர் இங்கே எப்படி வீடற்றவராக homeless ஆக மாறுகிறார் என்பதை கொஞ்சம் அரசியலும் கலந்து எழுதி வருகிறேன். சூழலுக்கு ஏற்ற


வெற்றிமணி ஆசிரியருடன் நவயுகா (2015)

வாறு விரைவில் படப்பிடிப்பு ஆரம்பிக்கவுள்ளேன்.

**? ஒற்றை பனைமரம் படத்தில் உங்கள் மகளை நடிக்கவைத்த அனுபவம் பற்றி?**

எனக்கு 2 மகள்கள், இருவருமே சின்ன வயதிலிருந்து பேச்சு மற்றும் நாடக கலை பயில்பவர்கள். இந்த படத்தில் எனது மூத்த மகள் அஜாதிகா நடித்திருந்தார். இயல்பாகவே அவருக்கு நடிப்பில் ஆர்வமும் திறமையும் உள்ளவர். இந்த பாத்திரத்தை பொறுத்தவரையில் அவர் ஒரு அதிர்ச்சியின் காரணத்தால் வாய்ப்பேச்சை இழந்த ஒரு சிறுமி, அதே சமயத்தில் அவர் தனது உணர்வுகளை புல்லாங்குழல் மூலம் வெளிப்படுத்த கூடிய திறமையுடையவர். என் மகள் என்ற காரணத்தால் இந்த கதாபாத்திரத்துக்கு தேவையான பயிட்சியை பிரித்தானியாவிலேயே என்னால் ஒழுங்கு படுத்த முடிந்தது. சொல்லும் காட்சிகளை உள்வாங்கி அதை உணர்வுபூர்வமாக வெளிக்கொண்டுவரும் திறமை இருந்த காரணத்தினால்தான் நான் அவரை இந்த படத்தில் நடிக்க தேர்ந்தெடுத்தேன்.

**? ஒற்றை பனைமரம் போல மிகவும் அழகான ஈழத்திரை படைப்புகளை தந்த 'புதியவன்' தொடர்ந்து சாதனை புரிய என்ன தேவைப்படுகின்றது ?**

சாதிக்க வேண்டுமென்ற அடிப்படையில் நான் சினிமாவுக்கு வரவில்லை. தொடர்ந்து வெளிவந்துகொண்டிருந்த சிறுசஞ்சிகைகள் பத்திரிகைகள் புலம்பெயர் நாடுகளில், நிதி பத்தாக்குறை காரணத்தால் நின்று போகின்ற




சூழ்நிலை 80/90களில் நேரிட்டது. அப்பொழுது சமூகம் தொடர்பான உழைக்கும் மக்களின் அவலங்களை, அன்றாடம் அவர்கள் படும் துயரை பற்றிய செய்திகள் வெளியிட முடியாத



நிலை உருவானது. அப்பொழுதுதான் சினிமா ஜனங்களிடம் சென்றடைய கூடிய ஒரு விவேகமான ஊடகம் என்ற காரணத்தால் நான் சினிமாவை தேர்ந்தெடுத்தேன். இது என் கனவு, லட்சியம் என்றெல்லாம் எண்ணி வரவில்லை. எனது சினிமா மக்களின் அவலங்களை ஆவணப்படத்தும் ஒரு கருவி.

**? ஒற்றைப் பனை மரம் படத்தை பற்றி சொல்லுங்கள்?**

யுத்தத்தின் பின் விதவையாக வாழும் ஒரு பெண் போராளியின் போராட்டங்களை, மற்றும் அந்த பிரச்சனைகளிலிருந்து விடுபட அவர்கள் எடுக்கும் முயற்சிகளை விவரிக்கும் ஒரு திரைப் படம் தான் ஒற்றைப்பனைமரம்.




இது 43 சர்வேதேச திரைப்பட விழாக்களில் தெரிவுசெய்யப்பட்ட படம், இது 23 விருதுகளை வெற்றிபெற்றிருக்கிறது. நண்பர்களின் உதவியோடு Norway, England, America, Canada, newsealand மற்றும் பல நாடுகளில் திரையிடமுடிந்தது. சினிமாவை 1வது, 2வது 3வது சினிமாவென பிரிப்பார்கள். 4வது சினிமாவும் உருவாக்க முடியுமென்ற ஒரு சிந்தனையில் நான் உருவாக்கியதே இந்த ஒற்றைப்பனைமரம். அதாவது விடுதலையடையாமல் தவித்துக்கொண்டிருக்கும் 4வது உலகநாடுகளில் இடம்பெறும் கதைகளை திரைப்படமாக்குவதே 4வது சினிமா. ஒற்றைப்பனைமரதின் வெற்றி தோல்விஎன்பதை விட திரையரங்குகளுக்கு வெளியே அந்த படம் உருவாக்கிய விவாதம் எனக்கு பெரும் திருப்தியளித்தது. தேடி தேடி இலங்கை இயக்குனர்களைபற்றி பதிவுசெய்து வரும் என் தோழி பிரபாலினி தொடர்ந்து உங்கள் பணியை செய்ய வேண்டிக்கொண்டு இன்று என்னையும் நேர்கண்டமைக்கு தோழி பிரபாலினிக்கும் வெற்றிமணி பத்திரிகைக்கும் நன்றி சொல்லி விடைபெறுகிறேன். அன்புடன் புதியவன்.






# தீபாவளிக்கு டிவியில் நேரடியாக ஜெயம் ரவியின் பூமி

லட்சுமண் இயக்கத்தில் இமான் இசையமைப்பில், ஜெயம் ரவி, நிதி அகர்வால் மற்றும் பலர் நடிக்கும் படம் பூமி. இப்படத்தின் டிரைலர் வெளிவந்து நல்ல வரவேற்பைப் பெற்றது.

கொரானோ ஊரடங்கு காரணமாக தியேட்டர்கள் திறக்கப்படாத காரணத்தால் இப்படம் ஓடிடி தளத்தில் வெளியாகும் என எப்போதோ தகவல் வெளியானது. இப்படத்தை ஹாட்ஸ்டார் ஓடிடி நிறுவனம் வாங்கியதாக தகவல் வெளியாகி இருந்தது.

ஆனால், தற்போது படத்தை சன் டிவியிலேயே நேரடி வெளியீட்டிற்காகவும் அவர்களது ஓடிடி தளத்திற்காகவும் மிகப் பெரிய விலை கொடுத்து வாங்கிவிட்டதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

வரும் தீபாவளி தினத்தன்று இப்படம் நேரடியாக டிவியில் வெளியாகும் எனத் தெரிகிறது. இப்படத்தின் தயாரிப்பாளர் அந்த டிவிக்கு நெருக்கமானவர்.

# சம்பளமே வாங்காமல் நடித்த யோகிபாபு; பின்னணி என்ன?

பேய்மாமா படத்தின் பாடல் வெளியீட்டு விழாவில் பேசிய நடிகர் யோகி பாபு தான் சம்பளமே வாங்காமல் நடித்தது குறித்து பேசியுள்ளார்.

விக்னேஷ் ஏலப்பன் தயாரிப்பில் ஷக்தி சிதம்பரம் இயக்கியுள்ள பேய்மாமா படத்தில் யோகிபாபு கதையின் நாயகனாக நடித்துள்ளார். இந்த படத்தின் பாடல் வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. இதில் நடிகர் யோகிபாபு பேசியதாவது;



ஷக்தி சிதம்பரம் என்னை கதாநாயகனாக நிறுத்தி உள்ளார். மிகவும் பயமாக இருக்கிறது.

இந்தப்படம் முதலில் வடிவேல் நடிப்பதற்காக பண்ணியது என்று ஷக்தி சொன்னார். உடனே நான் வடிவேல் ஜீனியஸ். அதனால் எனக்கு எப்படி செட்டாகும் என்று கேட்டேன்.

இந்தப்படம் வெற்றி அடைய எல்லோருடைய ஆதரவும், அன்பும் வேண்டும். நான் சம்பள விசயத்தில் பெரிய கறார் கிடையாது. சமீபத்தில் கூட ஒரு பெண் உதவி இயக்குனர், ஒரு கதை பண்ணிருக்கேன் நீங்க பண்ணிக் கொடுக்கணும். ஆனால் என்கிட்ட பட்ஜெட் இல்ல. இந்தப் படம் நடந்தா தான் சார் எனக்கு கல்யாணம் நடக்கும்னு சொல்லிச்சு.

நான் உடனே இலவசமாக நடித்து தர்றேம்மா உனக்கு முதல்ல கல்யாணம் நடக்கட்டும் என்று சொன்னேன். இப்படி நிறைய அட்ஜெஸ்மெண்ட் பண்ணிட்டு தான் இருக்கேன். படத்தின் டிரைலரில் சொன்ன மாதிரி நான் காமெடியன் தான். இவ்வாறு அவர் பேசினார்.




# இயக்குனர் ஆனார் வரலட்சுமி

'மெர்சல் படத்துக்குப் பிறகு தேனாண்டாள் பிலிம்ஸ் இப்படத்தைத் தயாரிக்கிறது. 2012ல் போடா போடி படத்தின் மூலமாகத் திரையுலகில் அறிமுகமானார் பிரபல நடிகர் சரத்குமாரின் மகளான வரலக்ஷ்மி. தாரை தப்பட்டை, விக்ரம் வேதா, சண்டகோழி 2, சர்கார், மாரி 2 எனப் பல படங்களில் அவர் நடித்துள்ளார்.

இந்நிலையில் கண்ணாமூச்சி என்கிற படத்தின் மூலமாக இயக்குநராக அறிமுகமாகிறார் வரலக்ஷ்மி சரத்குமார். இப்படம் பற்றிய அறிவிப்பும் முதல் தோற்ற போஸ்டரும் வெளியாகியுள்ளன. கதாநாயகிக்கு முக்கியத்துவம் தரும் வேடத்தில் வரலக்ஷ்மி நடிக்கிறார்.

மெர்சல் படத்துக்குப் பிறகு தேனாண்டாள் பிலிம்ஸ் இப்படத்தைத் தயாரிக்கிறது. இசை சாம் சிஎஸ். ஒளிப்பதிவு ஈ. கிருஷ்ணா.

---

29 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அக்மார்க் பாலசந்தர் படத்தின் களம். நடுத்தர வர்க்கக் கதாநாயகி. குடும்பத்தின் அத்தனை பொறுப்புகளையும் தனது சிறகுகளில் தாங்குகிறாள். அவளுக்கு ஏகப்பட்ட சிக்கல்கள், பிரச்சினைகள், சவால்கள் எழுகின்றன. விவாகரத்து, சகோதரனின் இழப்பு உட்பட பெரிய பெரிய சாவால்கள். அவளோ அனைத்தையும் தாங்குகிறாள். தனது உறுப்புகளைத் தானம் கொடுத்து கூட தன்னை வெறுத்தவர்களை நேசிக்கிறாள்.







இந்தப் படத்தில் இளையராஜாவின் இனிமையான பாடல்களுக்கு வரிகள் வழங்கியவர் வாலி. மனதில் உறுதி வேண்டும், கண்ணா வருவாயா, கண்ணின் மணியே, சங்கத்தமிழ்க் கவியே என பாடல்கள் பிரபலமாயின.

அடுத்த ஆண்டு தெலுங்கில் ஒரு சூப்பர் டூப்பர் படத்தை பாலசந்தர் இயக்கினார். அந்தப் படம் மூன்று தேசிய விருதுகளைப் பெற்றது. சிறந்த படம், சிறந்த இசை, சிறந்த பாடகர் எனும் பிரிவுகளில் விருது கிடைத்தது. சிறந்த நடிகருக்கான ஆந்திர அரசின் நந்தி விருது கதாநாயகனுக்குக் கிடைத்தது. கதாநாயகன் ஆந்திர மக்களின் மனம் கவர்ந்த சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவி !

அந்தப் படத்தின் பிரம்மாண்ட வெற்றி கே.பாலசந்தரை தமிழில் இயக்க வைத்தது. தமிழில் இயக்கினார். வேறு யார், கமலஹாசன் தான் ஹீரோ ! அந்தப் படம் தான் 'உன்னால் முடியும் தம்பி'.
























அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்